பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 தை 20வெள்ளிக்கிழமை 02.02.2018 கதிர் 89



# ரணிலின் ‘பொக்கற்’ சம்பந்தன்

## யாழ்.நகரில் மஹிந்த கிண்டல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப்ரவரி 02

**“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ‘பொக்கற்’. ரணில் விரும்புகின்றவற்றையே சம்பந்தன் செய்து வருகிறார்.”**

**– இவ்வாறு நேற்று யாழ்.நகரில் வைத்து கிண்டலான கருத்தை வெளியிட்டார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.**

பக்கம் 18 »

## மஹிந்தவுக்கு யாழில் கடுமையான பாதுகாப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப். 02

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்க யாழ். வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசார கூட்டம் நடை

பக்கம் 18 »

## தேர்தல் வன்முறையில் ஈடுபடுவோர் மீது சூடு!

### பொலிஸ் பேச்சாளர் எச்சரிக்கை

கொழும்பு, பெப் .02

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் போது வன்முறைகளில் ஈடுபடுவோர் மீது, தண்டனைச் சட்டக் கோவையில் உள்ளவாறு ஒருவருக்கு மர ணத்தை ஏற்படுத்தும் வரை துப்பாக்கிச் சூடு நடத்த முடியுமான சூழ் நிலைகள் ஏற்படுமாயின் அந்தச் சந்தர்ப்பத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்படும்.

இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உத

பக்கம் 18 »

## அம்பாந்தோட்டையில் சீனா; இந்திய அமைச்சர் சந்தேகம்

சென்னை, பெப் .02

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை இலங்கை சீனாவுக்குக் கையளித்தது தொடர்பில் சந்தேகம் கிளப்பியுள்ளார் இந்திய பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமன்.

தமிழகம், ராமநாதபுரத்

பக்கம் 18 »

## கச்சதீவுத் திருவிழாவில் பொலித்தீனுக்குத் தடை

### யாழ். அரச அதிபர் அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப். 02

வரலாற்றுச் சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இலங்கையிலிருந்து இம்முறை 6 ஆயிரத்து 500 பக்தர்கள் கலந்துகொள்

பக்கம் 18 »

## மஹிந்த மீது கோபமில்லை!

### பொதுஜன பெரமுனவின் யாழ். வேட்பாளர் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப். 02

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது யாழ்ப்பாண மக்களுக்குக் கோபம் எதுவும் இல்லை. அவர் இந்த நாட்டை ஆட்சி செய்தபோது யாழ். மக்கள் அனைவரும்

பக்கம் 03 »

## ரூபா 2 கோடி விவகாரத்தை மஹிந்தவும் கையில் எடுத்தார்

யாழ்ப்பாணம், பெப். 02

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட 2 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட இலஞ்சக் குற்றச்சாட்டை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கையில் எடுத்தார்.

பக்கம் 03 »




நேற்று மாலை முகநூலில் பரவலாக வந்த ஒரு விடயத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தம் என்று நினைக்கிறேன்.

*“யாரும் கறுப்புக் கொடி*

பக்கம் 03 »

## ஒரே குழுவாகியுள்ளனர் ஊழல் அரசியல்வாதிகள்

### பொலனறுவையில் மைத்திரி



கொழும்பு, பெப் .02

ஊழல் அரசியல்வாதிகள் இன்று ஒரே குழுவாக இணைந்திருக்கின்றனர்.

பக்கம் 03 »

## மாவிட்டபுரம் விவகாரத்தை மறைப்பது ஆணைக்குழுவுக்கே பெரும் அவமானம்

### கூறுகிறார் ஆணையாளர் ரட்ணஜீவன் கூல்



யாழ்ப்பாணம், பெப். 02

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் தமிழ்த் தேசியப் பேரவையின் வேட்பாளர்கள் சிலர் தேர்தல் அறிக்கை வெளியிட்டமை தொடர்பான விவகாரத்துக்கு முழுமையான ஆதாரங்கள் உள்ளன. அந்தத் தேர்தல் விதிமீறலை மூடி மறைப்பது தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே அவமானமாகும்.

– இவ்வாறு தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ண ஜீவன் கூல் தெரிவித்தார்.

பக்கம் 18 »

## தேர்தல் சுவரொட்டி ஒட்டியவர்களுக்கு 100 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், பெப். 02

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிய குற்றச்சாட்டில் வழக்குத் தொடரப்பட்ட இருவருக்கு தலா நூறு ரூபா தண்டம் விதித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கோப்பாய் பகுதியில்

பக்கம் 03 »

## விவாதத்தை 6ஆம் திகதியே முடிக்கவேண்டியதில்லை!

### சபாநாயகர் அலுவலகம் அறிவிப்பு

கொழும்பு, பெப். 02

மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் பாரிய நிதிமோசடி, அதிகார துஸ்பிரயோகம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுக்களின் விசாரணைஅறிக்கைகள் தொடர்பில் 6ஆம் திகதியே நாடாளுமன்ற விவாதத்தை நடத்தி முடிக்க

பக்கம் 03 »

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கைக் கட்சிகளுக்கு நாங்கள் வாக்களித்தால் தமிழினப்படுகொலையை நாங்களே நியாயப்படுத்தியவர்களாவோம்

யாழ்ப்பாணம், பெப். 02

தென்னிலங்கைச் சிங்களப் பெருந்தேசியவாதக் கட்சிகள் எல்லாம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு கிழக்கெல்லாம் போட்டியிடுகின்றன.

இந்தக்கட்சிகளில் போட்டியிடுபவர்கள் எல்லோரும் எமது அயலவர்கள், நண்பர்கள் அல்லது உறவினர்களாக உள்ளார்கள். தங்கள் வேலை வாய்ப்பு மற்றும் இதர சலுகைகளை எதிர்பார்த்தே இவர்கள் போட்டியிடுகிறார்கள் என்பது வெள்ளிடைமலை.

தெரிந்த முகம் என்பதற்காக இவர்களுக்கு நாங்கள் வாக்களித்தால், நிகழ்ந்த தமிழ் இனப்படுகொலையை நாங்களே நியாயப்படுத்தியதுபோல ஆகிவிடும் என்று முன்னாள் விவசாய அமைச்சரும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ.ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

நல்லூர் பிரதேசசபைத் தேர்தலில் மாம்பழச் சின்னத்தில் போட்டியிடுகின்ற சுயேச்சை வேட்பாளர்களை ஆதரித்து நேற்று முன்தினம் மணியந்தோட்டத்தில் பரப்புரைக் கூட்டம் நிகழ்ந்தது.



இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிங்களக் கட்சிகள் எல்லாம் தேர்தல்களின்போது ஆசனங்களைப் பிடிப்பதற்காகத் தங்களுக்கு இடையே போட்டிபோட்டுக் கொண்டாலும், இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என்ற கருத்து நிலையில் ஒன்றாகவே நிற்கின்றன.

மஹிந்தராஜபக்ஷவும்அவரது சகோதரர்களும் வெல்லப்பட முடியாமல் இருந்த விடுதலைப் புலிகளைத் தாமே தோற்கடித்தோம் என மார்தட்டுகிறார்கள். ரணில் விக்கிரமசிங்க அணியினர் தாங்களே கருணாவைப் புலிகளிடம் இருந்து பிரித்து புலிகளைப் பலவீனப்படுத்தித் தோற்கடிப்பதற்குக் காரணமாக இருந்தார்கள் என்று பெருமை பேசுகிறார்கள்.

## ஐங்கரநேசன் எச்சரிக்கை



இலங்கையை மாறிமாறி ஆண்ட இரண்டு பெருந்தேசிய வாதக் கட்சிகளுமே தமிழின அழிப்பில் ஒன்றுக்கு ஒன்று சளைத்தவை அல்ல.

இப்போது யுத்தம் முடிந்து விடுதலைப்புலிகள் களத்தில் இல்லை என்றவுடன் இந்தக் கட்சிகள் வடக்கு கிழக்கில் எல்லா வட்டாரங்களிலுமே போட்டிபோடுவதற்குக் குதித்துள்ளன.

அதுவும், ஆசை வார்த்தைகளைக் காட்டி எம்மவர்களையே வேட்பாளர்களாகவும் இறக்கியுள்ளார்கள். பரப்புரைக்காக இந்தக் கட்சிகளின் தலைவர்கள் எல்லோரும் இங்கே வந்து போகின்றார்கள்.

இங்கே தாங்கள் போட்டியிடுவதன் மூலம் தமிழ் மக்களிடையே தங்களுக்கு எதிர்ப்பு இல்லை என்று உலக நாடுகளுக்குக் காட்டுவதற்கு இவர்கள் விரும்புகிறார்கள்.

இந்தக் கட்சிகளுக்கு நாங்கள் போடுகின்ற வாக்குகளின் மூலம் எங்கள் மூலமே இங்கு நடைபெற்றது தமிழ் இனப்படுகொலையல்ல என்று சொல்லவைக்க விரும்புகின்றார்கள்.

தென்னிலங்கைக் கட்சிகளில் போட்டியிடுகின்றவர்கள் எங்களுக்கு எவ்வளவுதான் நெருக்கமானவர்களாக இருந்தாலும் இந்தத் தேர்தலில் அவர்களை நிராகரிப்போம்.

இவர்களுக்கு நாங்கள் வாக்களிக்காமல் தவிர்ப்போம். மற்றவர்களிடமும் இவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று அறிவுறுத்துவோம். இதுதான் யுத்தத்தை நடத்திய, அதற்கு ஆதரவளித்த தென்னிலங்கைக் கட்சிகளுக்கு நாங்கள் காட்டுகின்ற குறைந்தபட்ச எதிர்ப்பாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மஹிந்தவின் குடியுரிமையை பறிக்க இடமளிக்க முடியாது!

### *டிலான் பெரேரா தெரிவிப்பு*



கொழும்பு, பெப். 02

சுயாதீன தொலைக்காட்சியில் இலவசமாக தேர்தல் பிரசார விளம்பரம் ஒளிபரப்பியமை சம்பந்தமாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பெரிய ஊழல், மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என ராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

எவ்வாறாயினும் இதன் மூலம் மஹிந்த ராஜபக்ஷ அல்லது வேறு எந்த அரசியல் வாதியின் குடியுரிமையை இரத்துச் செய்ய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இடமளிக்காது.

குடியுரிமையை பறிப்பது ஜே.ஆர்.ஜெயவர்தனவின் கொள்கையே அன்றி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கையல்ல.

சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமை பறிகப்பட்ட காரணத்தினால் பாதிக்கப்பட்ட கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியால் அப்படியான செயற்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்ய முடியாது.

மைத்திரிபால சிறிசேன கட்சியின் தலைவராக இருக்கும் வரை அவ்வாறான செயலுக்கு பங்களிப்பை வழங்க மாட்டார் எனவும் டிலான் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

## கண்டி தலதா மாளிகையில் பிரித்தானிய இளவரசர்!

கொழும்பு, பெப். 02



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிரித்தானிய அரச குடும்ப பிரதிநிதிகளான இளவரசர் எட்வர்ட் மற்றும் இளவரசி சோபி ஆகியோர் வரலாற்று சிறப்புமிக்க கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

வழிபாடுகளை முடித்துக் கொண்டு நேற்றைய தினம் பிற்பகல் பேராதனை தாவரவியல் பூங்காவுக்கும் விஜயம் செய்துள்ளனர்.

இதேவேளை, பிரித்தானிய அரச குடும்பத்தின் பிரதிநிதிகளான இளவரசர் எட்வர்ட் மற்றும் அவரது பாரியார் இளவரசி சோபி ஆகியோர் இலங்கையின் 70 ஆவது சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீர்குலைந்த பொருளாதாரம் இப்போது சரியான பாதையில்

### மங்கள சமரவீர கூறுகிறார்

கொழும்பு, செப். 02

சீர்குலைந்த பொருளாதாரத்தை சரியான பாதையில் முன்னெடுக்க சமகால அரசாங்கத்தால் முடிந்துள்ளது என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.



உள்ளூராட்சி மன்ற தேர்தலின்பின்னர்ஜனாதிபதி, பிரதமர் பதவிகளிலோ, அரசாங்கத்திலோ மாற்றங்கள் ஏற்பட மாட்டாதென்றும் வெலிகம நகரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபை வேட்பாளர் குறித்து எதிர்க்கட்சித்தலைவரின் விளக்கக் குறிப்பு

நல்லூர் பிரதேச சபை வேட்பாளர் ஒருவர் தொடர்பில் எமது 'இனி இது இரகசியம் அல்ல' என்ற முதற்பக்கப் பத்தியில் கடந்த மாதம் 2 ஆம் திகதி வெளியான தகவல் தொடர்பில் சம்பந்தப்பட்ட வேட்பாளர் பல தடவை 'காலைக் கதிர்' அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தன்னிலை விளக்கம் அளிக்க முன்றார். தமக்கும் 'ஆவா' குழுவுக்கும் தொடர்பு என்ற தகவல் இட்டுக் கட்டிப் பரப்பட்ட வதந்தி என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

அவரது விளக்கத்திற்குப் பதிலாக அவர் தேர்தலில் நிற்கும் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவருமான சி.தவராஜா அனுப்பிவைத்த விளக்கக் குறிப்பைப் பிரசுரிப்பது சிறந்தது எனக்கருதி அதனை இங்கே அப்படியே பிரசுரிக்கின்றோம்.

'தவம்' 'ராசா' என்று இறுதியில் தமது பெயரைக் குறிப்பிட்டு அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பின் விவரம் வருமாறு:–

"கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி உறுப்பினரான வேட்பாளர் ஒருவரிக்கு 'ஆவா' குழுவுடன் நேரடித் தொடர்புகள் இருக்கின்றன என்றும் அவரிற்கு எப்படி வாக்கு அளிக்கும்படி கூட்டமைப்பு எங்களைக் கேட்டலாம் எனப் பொருமுகிறார்கள் அவ்வட்டார மக்கள்" என்ற தகவலை 'தவம்' இருக்கும் ராசாவிடம் மக்கள் விசனத்துடன் தெரிவித்தனர் எனத் தங்களது காலைக்கதிர் இதழில் வெளியான 'இனி இது இரகசியம் அல்ல' என்ற தலைப்பின் கீழான கட்டமிடப்பட்ட ஆக்கம் தொடர்பாக சம்பந்தப்பட்ட வேட்பாளர் என்னுடன் தொடர்பு கொண்டு தன்னுடைய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஒரே குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒரே மாதிரியாக இருக்க மாட்டார்கள். அதேபோன்றுதான் அவர்களது இயல்புகளும் செயற்பாடுகளும். தனக்கும் 'ஆவா' குழுவிற்குமோ அல்லது வேறெந்தக் குழுவுடனுமோ குற்றச் செயல்கள் தொடர்பான தொடர்புகள் எதுவும் இல்லை என்பதை அவர் தெரிவித்தமையோடு, தான் ஒரு சமூக சேவை செயற்பாட்டாளர் என்ற முறையிலும் பலருடனும் நட்பாகப் பழகுபவன் என்ற முறையிலும் பலரும் தன்னுடன் சேர்ந்து புகைப்படங்கள் எடுத்திருக்கின்றார்கள். பொது நிகழ்வுகள் அல்லது சிநேகிதர்களின் அழைப்பின் பேரில் தான் சென்ற வைபவங்களின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை வைத்துத்தான் தன் மீது இவ்வாறு சேறு பூசப்படு வதாகவும் அவர் தெரிவித்தார். தான் எவையேனும் குற்றச் செயலில் ஈடுபட்டார் என முறைப்பாடுகள் ஏதாவது இருக்கின்றதா என்பதையும் அவ்வாறு இருப்பின் அதனைத் தனக்குத் தெரியப்படுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இவ்வாறு தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கும் அவர் தான் ஒரு சிறந்த சமூக சேவையாளன் என்பதைப் பிரதேச மக்கள் யாவரும் அறிவார்கள் என்பதுடன் தான் வெற்றியீட்டும் பட்சத்தில் தனது வட்டார மற்றும் பிரதேச மக்களுக்குத் தன்னை தேவையான வகையில் அர்ப் பணித்துச் சேவை செய்யத் தாம் தயாராக இருக்கிறார் எனக் குறிப்பிட்டார்.

ஒருவர் மீது குற்றஞ் சுமத்தினால் அல்லது அவரது குறைகளை வெளிப்படுத்தினால் அவ்வாறு வெளிப்படுத்தியவர் மீது சமூக வலைத்தளங்களிலும் ஏனையமுறைகளிலும் சேறுபூசும் செயற்பாடுகளில் ஈடுபடுவதே இங்கு வழமையாகும். இக்கால கட்டத்தில் என்னிடம் நேரில் வந்து தனது நிலைப்பாட்டைத் தெரிவித்த அவரது குணாதிசயம் எனக்குப் பிடித்துள்ளதாலேயே இச் செய்திக் குறிப்பை அனுப்பிவைக்கின்றேன்.

'தவ(ம்) ராசா'

–என்றுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு**

சம்பந்தப்பட்ட எமது பத்தியின் தகவலால் மேற்படி குறிப்பிட்ட ஒரு வேட்பாளருக்கு அசௌகரியங்கள், பின்னடைவுகள் ஏற்பட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம்.

(ஆ–ர்)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிய குற்றச்சாட்டில் இருவர் கடந்த 20ஆம் திகதி இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் இருவரையும் கடந்த 21ஆம் திகதி பிணையில் விடுவித்த யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று, வழக்கு விசாரணையை நேற்று வரை ஒத்தி வைத்தது.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர்கள் இருவரும் குற்றத்தை மன்றில் ஒப்புக்கொண்டனர்.

தேர்தல்கள் சட்டத்தின் அடிப்படையில் அவர்கள் இருவருக்கும் தலா 100 ரூபா தண்டம் விதித்து நீதிமன்று உத்தரவிட்டது.

## ரூபா 2...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் உரையாற்றியபோதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி –

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா 2 கோடி ரூபாவை இந்த அரசு வழங்கியது என அந்தக் கட்சியின் சக உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூறுகின்றார். இவ்வாறு வாங்கிய பணத்தை அவர்கள் மக்களுக்கான எந்தத் திட்டத்தையும் செய்வதற்காகப் பயன்படுத்தாது தங்கள் திட்டத்துக்காகவே பயன்படுத்தியிருக்கிறார்கள்.

எனவே இனிமேலும் வடக்கு மக்கள் இவர்களிடம் ஏமாற்றமடையவேண்டாம். எனவே இவர்களுக்காக உங்களது வாக்குகளைப் பயன்படுத்த வேண்டாம். – என்றார். (ஐ–7)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டவில்லை, யாரும் மண்ணள்ளி வீசித் தூற்றவில்லை. காணாமல் போன எங்கள் பிள்ளைகளைத் திருப்பித்தா எண்டு எவரும் மார்பிலை அடித்து ஒப்பாரி வைக்கவில்லை. சிரித்துக் கொண்டே யாழ்ப்பாணம் வந்து, சிரித்துக் கொண்டே வெற்றிகரமாகத் திரும்பிவிட்டார் அவர்.

"மைத்திரி வந்தால், சம்பந்தன் வந்தால் கறுப்புத் துண்டைக் காட்டிக் கொண்டு எதிர்க்கும் கஜேந்திர குமார் அணி இப்போது யாழ்ப்பாணத்தில் இல்லையா? இனப் படுகொலைக்கும், தமிழர் பேரழிவுக்கும் மஹிந்தவுக்கும் சம்பந்தம் இல்லை எண்டு முடிவெடுத்து விட்டீர்களோ...?

"வெளிநாட்டிலை எங்கடை ஆட்கள் மஹிந்த இனப்படு கொலையாளி எண்டு வெள்ளைக்காரனுக்கு சொல்றாங்கள். அங்கை மஹிந்தர் வந்தால் தூள் கிளப்புறாங்கள் ... இங்கை யாழ்ப்பாணத்தில் என்னடாவென்றால் பூரண கும்பம் வைச்சு மாலை மரியாதை செய்யுது எங்கட சனம்.

"சம்பந்தன், சுமந்திரன் துரோகி என்று கூச்சல் போட்டு, மஹிந்தவை மகான் ஆக்கிப் போட்டாங்களப்பா...." – என்று முகநூலில் சில நண்பர்கள் விசனம் தெரிவித்திருந்தார்கள்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வருவதற்காக அம்பாந் தோட்டை மத்தள விமான நிலை யத்துக்கு மஹிந்தர் புறப்பட்டு விட்டார் என்ற செய்தி காலையில் வந்த உடனேயே எங்களின் பயர்பிராண்ட் (FireBrand) அரசியல்வாதி சிவாஜிலிங்கத்துடன் தொடர்பு கொண்டேன்.

"கறுப்புச் சட்டை, கறுப்புக் கொடி ஆயத்தமோ...? களம் இறங் கத் தயாரோ...?" என்று பத்திரிகையாளரான எங்களுக்கே உரித்தான – வழமையான – உசுப்பேற்றல் கேள்வியை எழுப்பினேன்.

"சீ...சீ... தேர்தலுக்கு வாறவருக்கு கறுப்புக் கொடி காட்டிறது அழகில்லை" என்றார் சிவாஜி யார்.

அவர் அப்படிக் கூறியபோது சம்பந்தப்பட்ட தரப்பான மஹிந்த ராஜபக்ஷவே ஒரு தடவை என்னிடம் கூறிய விடயம் என் நினைவுக்கு வந்தது.

அது மஹிந்தர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலம். மிக வலிமையாகக் கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்த புலிகளுடன் சமரசம் செய்ய அவர் முயன்று கொண்டிருந்தார். ஊடகவியலாளன் என்ற முறையில் இரு தரப்புகளுடனும் அதிகம் ஊடாடிப் பழகும் வாய்ப்பு எனக்கு இருந்தது. அதனால் தேவைப்பட்ட நேரம் எல்லாம் இரு பக்கத் தலைவர்களுடனும் தொடர்பாடல் பேணும் விசேட வசதியும் தேவையும் அடிக்கடி எனக்கு ஏற்பட்டன.

அலரி மாளிகையில் ஒரு நாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பல விடயங்களையும் பேசிக் கொண்டிருந்தேன். தமது அரசியல் அனுபவங்களை சுவையாகப் பகிர்ந்து கொண்டிருந்தார்; அதனிடையே அவர் சொன்ன விடயம்.

"2003 இல் சந்திரிகா ஜனாதிபதி, ரணில் பிரதமர், நான் எதிர்க் கட்சித் தலைவர். அப்போது உங்கள் மகேஸ்வரன் இந்து விவகார அமைச்சர். ஒருநாள் 'நாளை ஒரு புரோகிராம் உள்ளது. தயாராக இருங்கள்!' என்று என்னிடம் சொன்னார். திடுதிப்பென காலையில் நேரத்துடன் வந்து என்னைக் கூட்டிச் சென்றார். எனது கைத் தொலைபேசியைக் கூட செயலிழக்க வைக்கச் சொன்னார். ஜனாதிபதி சந்திரிகாவுக்குத் தெரியாமல் என்னை யாழ்ப்பாணம் கூட்டிச் செல்ல ஏற்பாடு செய்திருந்தார். வழி மறிக்கும் அழைப்பு ஏதும் வராமல் இருக்கவே தொலைபேசியை செயலிழக்கச் செய்யும் ஒழுங்கு. இரத்மலானை விமான நிலையத்துக்குக் கூட்டிச் சென்றார். அங்கு விசேட விமானம் தயாராக இருந்தது. விரைந்து ஏறினோம். ஒரு மணி நேரத்தில் பலாலியில்.

"யாழ்ப்பாணம் நல்லூரில் இருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் இருக்கும் இடத்தில் (அவர் குறிப்பிட்டது ஆனைப்பந்தி எனநினைக்கிறேன்) உள்ள இந்துக் குருமார் ஒன்றியத்தைத் திறந்து வைப்பதற்கு பெரும் ஊர்வலமாக அழைத்துச் சென் றார் மகேஸ்வரன் . கழுத்து நிறைய மாலைகள் குவிந்தன. தாராள மாக மேள தாளங்கள், நிறைகுடங்கள். யாழ்ப்பாணமே திரண்டு வந்து என்னை வரவேற்றதாக எனக்கு உணர்வு. நான் பூரித்துப்போனேன்.

"அன்று யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்பட முன்னர் மகேஸ்வரன் வீட்டில் குடித்த கூழை நினைத்தால் எனக்கு இப்போதும் நாவூறும்.

"அது முடிந்து அடுத்த தடவை நான் யாழ் போனபோது தலைகீழ் அனுபவம். நான் அப்படி நடக்கும் என்று எதிர்பார்க்கவே இல்லை சில மாதங்கள் கழித்து இம்முறை 2004 பொதுத் தேர்தல் பிரசாரத்துக்காகச் சென்றேன்.

"போன தடவை மகேஸ்வரனுடன் போனமையால் பெரு வரவேற்பு. அடுத்த தடவை பிழையான ஆளுடன் போய்விட்டேன் போலும். ஜே.வி.பியில் இருந்த விமல் வீரவன்ஸவையும் கூட்டிக் கொண்டு வல்வெட்டித்துறைக்குப் போன எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது. நான் அப்படி நடக்கும் என்று எதிர்பார்க்கவேயில்லை. யாழ்ப்பாணத்துப் பெண்கள் சேலையை இடுப்பில் செருகிக் கொண்டு அடித்துத் துரத்தும் ஆயத்தங்களுடன் விளக்கு மாற்றுடன் ஆவேசமாக எங்களை எதிர் கொண்டனர். அது எனது அரசியலில் ஒரு விசித்திரமான அனுபவம்." – என்றார் மஹிந்த ராஜபக்ஷ.

அந்த அனுபவம் எதிர்பாரா அதிர்ச்சியை அவருக்குத் தருந்திருந்தது என்பதை அவரது வார்த்தைப் பிரயோகங்களில் இருந்து நானும் உணர்ந்து கொண்டேன்.

பொதுச் தேர்தலுக்கு எதிர்க் கட்சித் தலைவராக வருகை தந்த மஹிந்த ராஜபக்ஷவை விளக்கு மாறு காட்டி, பிரசாரம் செய்ய விடாமல் கலைத்த தாய்மாரை நினைத்துப் பார்க்கிறேன். அது புலிகளின் காலம் 'முறம்' கொண்டு புலி விரட்டிய தமிழ்ப் பெண்கள் அவர்கள்.

தேர்தலுக்கு வந்த மஹிந்தவை அந்த வல்வெட்டித்துறைத் தாய்மார்கள் விளக்குமாற்றால் விரட்டினர். இன்றோ அதே வல்வெட்டித்துறை மண்ணின் மைந்தன் தேர்தலுக்கு வருபவருக்குக் கறுப்புக்கொடி காட்டுவது பொருத்தமற்றது என்று தனக்குத் தானே நியாயப்படுத்துகிறார்.

காலம் நன்றாக மாறித்தான் போய்விட்டது...!

-மின்னல்-

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவலைகள் இல்லாது சந்தோசமாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்தனர்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் சார்பில் வலிகாமம் தெற்கில் போட்டியிடும் வேட்பாளரான செல்வராசா சுஜித்தா மஹிந்த முன்னிலையில் தெரிவித்தார்.

நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் உரையாற்றிய அவர்,

மஹிந்த இருக்கும் போது யாழ்ப்பாணத்தில் மக்கள் எந்த விதமான கவலையும் இல்லாமல் இருந்தார்கள். அவரது ஆட்சிக் காலத்தில் எங்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும் கிடைத்தன. நாங்கள் நிம்மதியாக எங்கள் வாழ்க்கையைத் தொடர்ந்து கொண்டிருந்தோம்.

அவ்வாறானதொரு நிலையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்தவை ஒருமுறை மாற்றிப் பார்ப்பதற்காகவே தமிழ் மக்கள் வேறொருவருக்கு வாக்களித்தார்கள். ஆனால் வந்தவரின் செயற்பாடுகள் தற்போது எமக்குப் பல பிரச்சினைகளையும் கஷ்டங்களையும் ஏற்படுத்தியுள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ இருந்த போது ஒரு நாளைக்கு 1,200 ரூபா உழைத்தால் 500 ரூபா மீதப்படுத்த முடியும். ஆனால் இன்று 1,200 ரூபா உழைத்த போதும் அது செலவுகளுக்குப் போதுமானதாக இல்லை. எங்களைப் போன்ற பெண்களுக்கு இன்று தேவையானது பணமே. எமக்குப் பிணை முறி மோசடி, பண மோசடி செய்தவர்கள் தேவையில்லை.

எனவே எமது பிள்ளைகளை நன்கு கற்பித்து அவர்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை ஏற்படுத்துவதற்கு மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்து அவரையே பிரதமராக்க வேண்டும். – என்றார். (ஐ –7)

## விவாதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய அவசி யமில்லை எனச் சபா நாயகர் அலுவலகம் தெரி வித்துள்ளது.

சபாநாயகர் அலுவலகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற விவாதத்தை நடத்துவதற்குப் போதியளவு கால அவகாசத்தைப் பெற்றுக் கொள்வதில் எவ்வித தடையும் கிடையாது.

கட்சித்தலைவர்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே நாடாளுமன்ற விவாதத்தை 6ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அன்றையதினம் விவாதத்தை நடத்திக் கட்சித் தலைவர்களின் தேவைக்கு அமைய விவாதத்தை வேறு நாள்களிலும் நடத்துவதற்கு எவ்வித தடையும் கிடையாது.

எதிர்வரும் 6ஆம் திகதி நாடாளுமன்ற விவாதம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டதன் மூலம் அன்றைய தினமே விவாதம் நடத்தி முடிக்கப்படும் என ஆதகப்படாது என்று சபா நாயகர் அலுவலகம் மேலும் கூறியுள்ளது. (ஐ)

## ஒரே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் மக் களுக்குச் சேவை செய்வதற்காகவோ அல்லது நாட்டை அபிவிருத்தி செய்வதற்காகவோ அன்றித் தமது தனிப்பட்ட அபிவிருத்திக்காகவே அதிகாரத்தைக் கேட்கின்றனர்.

– இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நேற்று முற்பகல் பொலனறுவை செவனபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொய்ப் பிரசாரங்களிலும் சந்தர்ப்பவாத அரசியல் தந்திரோபாயங்களிலும் இன்று நாட்டு மக்கள் சிக்கிக்கொள்ள மாட்டார்கள். நாடு பயணிக்கும் பாதையை அவர்கள் உன்னிப்பாக கவனித்து வருகின்றனர்.

இன்று நாட்டிற்குத் தேவையாக இருப்பது மன்னராட்சி முறையன்றி மக்களாட்சி முறையே ஆகும். இதனையே மக்களும் எதிர்பார்க்கின்றனர். அத்தகையதொரு அரசியல் மற்றும் சமூக மாற்றத்தை நாட்டில் ஏற்படுத்தவே கடந்த மூன்று வருட காலமாக அர்ப்பணிப்புடன் செயற்படுகிறேன்.

ஊழல், மோசடிகளில் ஈடுபட்டு மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்கும், அதிகார துஷ்பிரயோகங்களைச் செய்து அரச வளங்களை அழிவடையச் செய்யும் அரசியல்வாதிக்கு எதிராக கடந்த ஆட்சி காலத்தில் எதுவித நடவடிக்கைகளும் அப்போதைய தலைவர்களால் மேற்கொள்ளப்படவில்லை. அவற்றைப் பற்றி உரையாடக் கூட அவர்கள் விரும்பவில்லை.

சுகாதார அமைச்சர் என்ற வகையில் நான் மத்திய வங்கி தலைமையகத்தில் இடம்பெற்ற அரசின் அபிவிருத்திச் செயற்பாடுகளைப் பற்றிய கலந்துரையாடலில் பங்குகொண்டபோது அரசின் ஊழல், மோசடிகள் தொடர்பாக உரையாடினேன். இதனால் மறுநாள் காலை என்னை அலரிமாளிகைக்கு அழைத்த முன்னாள் தலைவர் அமைச்சர் என்றவகையிலும், கட்சியின் பொதுச்செயலாளர் என்றவகையிலும் அரசின் ஊழல், மோசடிகள் தொடர்பாகப் பேசக்கூடாது எனவும் வேறு பயணமொன்றை மேற்கொள்ளத் தயாராகின்றீர்களா எனவும் என்னிடம் கேட்டார். ஊழல், மோசடிகளுக்கு எதிராகச் செயற்படுவது மாத்திரமன்றி அது தொடர்பாகப் பேசக்கூட முடியாது எனில், மக்களின் நன்மைக்காக தனியானதொரு பயணத்தை மேற்கொள்ளவேண்டும் அன்றே உறுதியாகத் தீர்மானித்தேன். – என்றார். (ஐ)

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி

அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டித்தரப்படும்

108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 8680
077 592 5088

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## யாழில் மஹிந்தரின் கயிறு!

தமது பதவியை இழந்த பின்னர் முதல் தடவையாக நேற்று யாழ்ப்பாணம் வந்து திரும்பியிருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனைத் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ.

நாட்டின் உயர் பதவியில் இருந்து தேர்தல் மூலம் 'தொபுகடீர்' என வீழ்ந்த மஹிந்த ராஜபக்ஷ, அத்தோல்வி தந்த படிப்பினை காரணமாகத் திருந்தியிருப்பரோ - தமது போக்கில் மாற்றத்தைக் கடைப் பிடிப்பாரோ - என்றெல்லாம் தமிழ் மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், அவர் மாறவேயில்லை. அதே மேலாதிக்கச் சிந்தனையுடைய சிங்கள, பௌத்த அரசியல்வாதி தாம் என்பதை தமது யாழ். விஜயத்தின் போது நிரூபித்துச் சென்றிருக்கின்றார் அவர்.

முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல, நேற்று யாழ்ப்பாணத்தில் அவர் ஆற்றிய உரை அவரின் மனநிலைப் போக்கைத் தோலுரித்துக் காட்டத் தவறவில்லை.

யுத்தம் முடிவுற்ற பின்னர் இனப்பிரச்சினைத் தீர்வுக்காகத் தாம் தமிழர் தரப்போடு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு - சமரசப் பேச்சு நடத்தத் தயாராக இருந்தார் என்றும் -

அதற்காக அழைப்பு விட்டுத் தாம் காத்திருந்த போதும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பேச வராதமையால் அந்த முயற்சி கைகூடாமல் போயிற்று என்றும், முழு அரசியல் புளுகு மூடையை யாழ்ப்பாணத்திற்கு வந்து அவர் அவிழ்த்து விட்டிருக்கின்றார். அவர் யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்கள் அரசியல் அறிவு குறைந்தவர்களோ அல்லது நடந்த விடயங்களை விரைவில் மறந்து விடும் அறிவிலிகள் என்றோ நினைத்து விட்டார் போலும்.

2011 ஜனவரி 10 ஆம் திகதி தொடக்கம் 2012 ஜனவரி 18 ஆம் திகதி வரை மொத்தம் பதினெட்டு சுற்றுப் பேச்சுக்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசுத் தரப்புடன் நடத்தியவர்கள் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்புப் பிரதிநிதிகள்.

இந்தப் பேச்சுகளின் முதல் மூன்று சுற்றுகளின்போதே இனப் பிரச்சினைத் தீர்வுக்கான தமது பக்க யோசனைத் திட்டத்தைப் பகுதி பகுதியாக வழங்கி முழுமைப்படுத்தியிருந்தனர் கூட்டமைப்பினர். அது தொடர்பில் அரசின் பதிலையும் - முடிவையும் - கூட்டமைப்பினர் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

அதன் பின்னர் ஐந்து மாதங்களாக ஏழு சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றன. ஆனால் கூட்டமைப்புக் கொடுத்த தீர்வுத் திட்ட யோசனைக்கு மஹிந்த அரசு பதிலும் தரவில்லை, பிரதிபலிப்பும் காட்டவில்லை. அதனால் வெறுத்துப் போன கூட்டமைப்பினர் வேறு வழியின்றி அந்தப் பேச்சு முயற்சியில் இருந்து வெளியேறினர்.

மீண்டும் 2011 ஒக்ரோபரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ - கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் சந்திப்பு இடம்பெற்றது.

கூட்டமைப்பின் தீர்வுத் திட்ட யோசனைக்கு அரசு தரப்பு பதில் தரா விட்டாலும் முன்னைய சமாதான முயற்சிகள் தொடர்பான ஐந்து ஆவணங்களின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களைத் தொடர அந்தச் சந்திப்பில் முடிவு செய்யப்பட்டது.

2011 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 16 ஆம் திகதி முதல் மீண்டும் அமைதி பேச்சுக்களை மஹிந்த அரசுடன் கூட்டமைப்பு ஆரம்பித்தது. மங்கள முனசிங்க தலைமையிலான குழுவின் முன்னைய அறிக்கை, ஜனாதிபதி சந்திரிகா காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அமைதி முயற்சிக்கான ஆவணங்கள், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்த நிபுணர் குழு அறிக்கை, அந்த நிபுணர் குழுவின் ஸ்தாபிதக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரையின் தொகுப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களைத் தொடரத் தீர்மானிக்கப்பட்டது.

பேச்சுக்கான பன்னிரண்டு தலைப்புகளும் முடிவுசெய்யப்பட்டன. இப்போது நல்லாட்சி அரசுடன் புதிய அரசமைப்பு முயற்சிகள் தொடர்பில் இறுதி செய்யப்பட்ட பன்னிரண்டு தலைப்புகளுமே அப்போதும் வகுக்கப்பட்டன. அவற்றின் அடிப்படையில் தொடர்ந்த பேச்சுக்களில் காணி தொடர்பான அதிகாரப்பகிர்வு விடயத்தில் சில தீர்மானங்கள், முடிவுகள் கூட எட்டப்பட்டன.

இந்தப் பேச்சுக்களின் முக்கிய அம்சம் என்னவென்றால், இந்தப் பேச்சுக்களின் ஒவ்வொரு சுற்றின் போதும் கூட்டத்தின் அறிக்கை தயார் செய்யப்பட்டு, அடுத்த கூட்டத்தின் ஆரம்பத்தில் முன்னைய கூட்ட அறிக்கை வாசித்துப் பதிவு செய்யப்பட்டது.

அந்தப் பதிவுகள் இந்தக் கூட்டங்களுக்கான ஆதாரங்களாக இன்னும் உள்ளன.

கடைசியாக 18 ஆவது கூட்டத்தை 2012 ஜனவரி 16, 17, 18 ஆம் திகதிகளில் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடத்துவது என அதற்கு முந்திய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அந்த மூன்று நாள்களும் உரிய நேரத்தில் கூட்டத்துக்குச் சென்று தமிழ்க் கூட்டமைப்பினர் காத்திருந்தனர். ஆனால், அரசு தரப்புப் பிரதிநிதிகள் வரவேயில்லை.

இதுதான் கடந்த காலத்தில் மஹிந்த அரசுடன் கூட்டமைப்பினர் நடத்திய அமைதிப் பேச்சுக்களின் சுருக்கச் சரித்திரம்.

பேச்சுக்குத் தனது அரசுத் தரப்புப் பிரதிநிதிகளை அனுப்பாமல் கூட்டமைப்பினரை உதாசீனப்படுத்தி, திமிர்த்தனத்துடன் நடந்து கொண்டது மஹிந்த அரசு.

அப்போது, அப்படி நடந்து கொண்ட அரசின் தலைவர் இப்போது யாழ்ப்பாணத்துக்கு வந்து, தாம் கூட்டமைப்புடன் தீர்வுக்கான சமரசரப் பேச்சு நடத்துவதற்கு அழைப்பு விடுத்துக் காத்திருந்தார் என்றும், கூட்டமைப்பினர்தான் பேச்சுக்கு வரவேயில்லை என்றும் இங்கு வந்து 'ரீல்' விடுகின்றமை, யாழ்ப்பாண மக்களை ஏமாளிகளாகக் கருதும் நடவடிக்கையன்றி வேறில்லை.

தமிழர்கள் மீது கொடூர யுத்தம் ஒன்றை அவிழ்த்து விட்டு இலங்கைத் தமிழினத்தின் ஆன்மாவில் நீங்காத வடுவாக பெரும் ரணகளத்தை ஏற்படுத்திய ஒரு சிங்களத் தலைவர், தாம் தமது அந்தப் பேரினவாத நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை - மாறப் போவதில்லை என்பதையே இந்த உண்மைக்கு மாறான விடயங்கள் அடங்கிய உரை மூலம் குறிப்புணர்த்திச் சென்றிருக்கிறார் என்றே கருத வேண்டியுள்ளது.

# இலங்கை - அமெரிக்க இராஜதந்திர உறவை வலுப்படுத்த ஒருவருடத் திட்டம்!

## அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஷாப் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 02

அமெரிக்க - இலங்கைக்கு இடையிலான இராஜதந்திர உறவை பின்னோக்கிப் பார்ப்பதற்கு மேலாக, பிராந்தியத்தில் சகிப்புத் தன்மையுடன் கூடிய நிலையான ஜனநாயகத்துடனான இலங்கையின் எதிர் காலத்திற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமெரிக்கா ஆரம்பிக்கவுள்ளது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஷாப் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஷாப் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரமடைந்து 70 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது. ஐக்கிய அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 70 ஆவது ஆண்டு நிறைவையும் இது குறிக்கின்றது.

இந்த மைல் கல்லினைக் கௌரவிக்கும் முகமாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகமானது எதிர்வரும் 12 மாதங்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளது.

நாட்டின் எல்லாப் பின்புலங்களையும் சகல மதங்களைச் சார்ந்த இலங்கையர்களையும் இணைத்து மேற்கொள்ளப்படும் கலாசார நிகழ்வுகளையும் கல்வி மற்றும் சமூக ஈடுபாடுகளை உள்ளடக்கி USSL70 என்ற நிகழ்ச்சித் திட்டமானது கடந்த 7 தாப்த கால ஐக்கிய அமெரிக்கா - இலங்கைக்கிடையிலான உறவுமுறையின் மதிப்பு மற்றும் பங்காண்மையின் அம்சங்களை முக்கியத்துவப் படுத்துகிறது.

எமது தூதரகச் சமூகமானது இலங்கை நண்பர்கள் மற்றும் பங்காண்மையாளர்களுடன் 70 வருட சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதில் மகிழ்வடைகிறது.

ஏழு தசாப்தங்களாக ஐக்கிய அமெரிக்க அரசானது இலங்கையுடன், மிகப்பெரிய வெளிநாட்டு உதவிக் கொடைவழங்குநர்களுள் ஒருவராகவோ அல்லது இலங்கையின் மிகப் பெரிய வர்த்தகப் பங்காளராகவோ தோளோடுதோள் நின்றுள்ளது.

இந்த நிலையில், இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நியூயோர்கைச் சேர்ந்த ஜாஸ் இசைக்கலைஞரானவிக்ளிஃப் கோர்டன் (Wycliffe Gordon ) இம் மாத இறுதிப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

சுதந்திரதினத்தை முன்னிட்டு இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் ஏற்பாடுசெய்துள்ள மாபெரும் கலை நிகழ்ச்சியிலும் அவரது குழுவினர் பங்கேற்கவுள்ளனர்.

ஒரு வருடத்திற்கு திட்டமிடப்பட்டுள்ள இலங்கையின் சுதந்திரதின நிகழ்வுகளில் ஐக்கிய அமெரிக்காவின் படத் தயாரிப்பாளர்கள், அமெரிக்க திரைப்படக் காட்சி, அமெரிக்க பல்கலைக் கழகங்களின் கல்விச் சந்தை, இலங்கை இளைஞர்களுடனான விளையாட்டு பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் எமது திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

USSL70 என்ற நிகழ்ச்சித் திட்டமானது இலங்கைக்கு நல்லெண்ண நோக்கில் விஜயம் மேற்கொள்ளும் அமெரிக்க இராணுவத்தின் இருதரப்பு ஒப்பந்தக் கைச்சாத்திடுதல் போன்ற புதிய முக்கியத்துவம் வாய்ந்த இருதரப்பு முனைப்புக்களையும் எடுத்துக்காட்டும்.

அத்துடன் இருதரப்பு நாடுகளுக்கும் இடையிலான பயிற்சிச் செயற்பாடுகளின் பிரசாரத்தின்போது, இராணுவத்தினர் அனர்த்த பதிற்செயற்பாடுகளை அதிகரித்துக்கொள்வதுடன் இருநாடுகளுக்கிடையிலான நடவடிக்கைக்கான திறனையும் விஸ்தரித்துக் கொள்வர்.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவராலயத்தின் ஆதரவுடன் 21 ஆம் நூற்றாண்டுக்கான வேலை வாய்ப்புக்காக இலங்கை இளைஞர்களைத் தயார்படுத்த உதவும் அதேவேளையில், இலங்கையின் பாற்பண்ணை உற்பத்தித் தொழிலை மிகவும் திறனாகச் செய்வதற்கு விவசாய உதவிகளும் வழங்கப்படும்.

எமது USSL70 நிகழ்ச்சித் திட்டம், நம் வரலாற்றை பின்னோக்கிப் பார்ப்பதற்கு மேலாக, பிராந்தியத்தில் சகிப்புத்தன்மை மற்றும் செழிப்புத் தன்மையுடன் கூடிய ஒரு நிலையான ஜனநாயகத்துடனான இலங்கையின் எதிர் காலத்திற்கான ஒரு பார்வை நோக்குப் பற்றியதாகும்.

இன்னும் 70 வருடங்களிலும் அதற்குப் பின்னும் அமெரிக்கா அந்தப் பார்வை நோக்குகளை யதார்த்தமாக்குவதற்கு எமது ஒருவருட நிகழ்ச்சித்திட்டம் உதவி செய்யும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஷாப் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஐ.தே.க விற்கு எவருடனும் 'டீல்' இல்லை!

## அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவிப்பு



கொழும்பு, பெப். 02

சட்டம் ஒழுங்கை சீராகப் பேணி ஒரு புதிய சூழலை உருவாக்குவதே எமது தேவையாக உள்ளது .

ஐக்கிய தேசியக் கட்சியான எங்களுக்கு எவருடனும் எது விதமான டீலும் இல்லை என சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

வழக்குகளை விரைந்து விசாரித்து முடிப்பதற்கு நாங்கள் விரைவில் புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வருவோம். நாங்கள் யாருடைய நலனுக்காகவும் எமது கொள்கைகளை மாற்றவில்லை.

2020 இல் எவ்வாறு தேர்தலைச் சந்திப்பது என்று ஐக்கிய தேசியக் கட்சி இதுவரை எதுவித முடிவும் எடுக்கவில்லை. இலங்கைபொலிஸை மீளமைப்புச் செய்வது அவசியமாகிறது. திட்டமிடப்பட்ட குற்றங்களுக்கு எதிராக நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்.

எங்களுக்கு மக்களுடனேயே 'டீல்' உள்ளது. சட்டம், ஒழுங்கை சீராகப்பேணி ஒரு புதிய சூழலை உருவாக்குவதே எமது தேவையாக உள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளதால் மட்டும் அந்த வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்கும் எனக் கூற முடியாது. மக்கள் அவரவர் விருப்பப்படியே வாக்களிப்பர் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## நாளை

03.02.2018
சனிக்கிழமை

நட்சத்திரம் : பூரம் பி.ப.3.29 வரை
திதி :திருதியை பி.ப.2.56 வரை
சுபநேரம்: 3.35 – 5.05 வரை
இராகுகாலம்: 9.35 – 11.05 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணைமுறி மோசடிக்கும் ஐ.தே.கவுக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை - அஜித் பீ பெரேரா



கொழும்பு, பெப். 02

பிணைமுறி மோசடிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை என திலக் மாரப்பன அறிக்கை உறுதி செய்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் கூட்டுச் சேர்ந்து தேசிய சொத்துக்களை சூறையாடிய பழைய திருடனே எமது ஆட்சியில் மீண்டும் திருடியுள்ளான் என மின்வலு சக்திவள புத்தாக்க பிரதியமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய பிணைமுறி அறிக்கையுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தொடர்பு குறித்து நேற்று முன்தினம் மின்வலு சக்திவள புத்தாக்க அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெளிவுப் படுத்துகையிலேயே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிணைமுறிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தொடர்பில்லை. இதனை திலக் மாரப்பன தலைமையிலான அறிக்கை உறுதி செய்துள்ளது. பழைய திருடனே எமது ஆட்சிக் காலத்திலும் மீண்டும் திருடியுள்ளான்.

2008 ஆம் ஆண்டு காலத்தில் பெரிய ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. அந்தக்கால அரசுடன் கூட்டாகச் செயற்பட்ட அலோஷியஸ் மகேந்திரனே திருடியுள்ளார் என பெரிய ஊழல் மோசடி மற்றும் பிணைமுறி தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை தெரிவித்துள்ளது.

அதனுடன், பெபர்சுவல் ட்ரெரிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தொடர்பில்லை, அலோஷியஸ் மகேந்திரன் ஐக்கிய தேசியக் கட்சியினர் அல்ல. எனவே, மக்கள் மனதை வென்ற எமது கட்சிக்கு சேறு பூசவே இந்த திரிபுபடுத்தல்கள் இடம்பெற்றுள்ளன.

அந்த அறிக்கையில் இலங்கை வங்கி, இலங்கை மத்திய வங்கி மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திலேயே மோசடிகள் இடம்பெற்றுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் எங்கும் ரவி கருணாநாயக்க கொள்ளையடித்துள்ளார் என்று பதியப்படவில்லை.

இந்த அறிக்கைகள் சுதந்திரமாக நீதிக்குட்பட்டு எழுதப்பட்ட அறிக்கையாகும். அந்த அறிக்கையில் பலராலும் விமர்சிக்கப்படும் ஐக்கிய தேசிய கட்சியினர் திருடர்களை காப்பாற்ற நடத்தும் கோப் குழு அடிக்குறிப்புகள் குறித்தும் சிறந்த வசனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அவை சாட்சிகளாகவும் உண்மைத் தன்மை கொண்டவை எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, நாங்கள் விவாதத்திற்கு தயார். உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் இந்தப் பிணைமுறி தொடர்பான விவாத முடிவுகளில் இருந்து எடுக்கவேண்டுமா? இல்லையா? என்பதை பொதுமக்களே தீர்மானிக்க வேண்டும்.

ஆயினும், எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு வரையில் இலங்கைப் பிரதான கட்சிகளின் கூட்டு ஒருபோது குலையாது, அரசை உருவாக்கியவர்கள் நாங்களே. எனவே எம்மீது வீசப்படும் சேறுகள் எமது கட்சியின் வெற்றிக்கு எதிர்வரும் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தவேயன்றி அதில் எதுவித உண்மைகளும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## அரசியல் நடவடிக்கைகளுக்கு சிறுவரை பயன்படுத்தவேண்டாம்!

### தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிப்பு

கொழும்பு, பெப். 02

அரசியல் நடவடிக்கைகளுக்காக சிறுவர்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அனைத்து அதிகாரக்கட்சிகளிடமும் சுயேச்சைக் குழுக்களையும் கேட்டுக்கொண்டுள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக தேர்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த சந்தர்ப்பத்தில் சிறுவர்களை பல வழிகளில் அரசியல் நடவடிக் கைகளில் பயன்படுத்துவதாக பொதுமக்களிடமிருந்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

சிறுவர்களை அரசியல் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளசெய்வதன் மூலம் அவர்களுக்கு உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் தாக்கம் ஏற்படுமாயின் அது சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகமாகும்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுமாயின் 1929 என்ற தொலைபேசியின் ஊடாக தகவல் தருமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கேட்டுக்கொண்டுள்ளது.

## களனி ரஜமஹா விகாரையில் ஜனாதிபதி, பிரதமர் வழிபாடு!



கொழும்பு, பெப். 02

களனி ரஜமஹா விகாரை யின் வருடாந்த துருத்து மஹா பெரஹரா வின் இறுதி ரந்தோலி பெரஹரா சிறப்பான முறையில் இடம்பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் வழிபாடுகளில் கலந்து கொண்டனர்.

## இராகலை ஹந்தஹந்திய வீதிப்போக்குவரத்து பாதிப்பு!



கொழும்பு, பெப். 02

இராகலை ஹந்தஹந்திய என்ற வீதியில் பெரிய கற்பாறையொன்று உடைந்து வீழ்ந்துள்ளது. இதனால் இந்த வீதியினூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இதன் ஒரு நிழல் வழிவீதி முற்றாக மூடப்பட்டுள்ளது. இதேவேளை மேலும் இரண்டு பாறைகள் உடைந்து விழும் ஆபத்திலிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இராகலை ஹந்தஹந்திய வீதியில் வாகனங்களை செலுத்தும்போது சாரதிகள் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை பெக்கோ இயந்திரங்களை பயன்படுத்தி கற்பாறைகளை அகற்றுவதற்கு பயன்படுத்திய முயற்சி தோல்வியுற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

கற்பாறையை இரசாயனத் திரவத்தைப் பயன்படுத்தி உடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று நிலக்கீழ் பொறியிலாளர் அலுவலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## வழிகாட்டல் வகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.2

இவ்வாண்டுக்கான சைவப் புலவர் மற்றும் இளம் சைவப் புலவர் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெற்று வருகின்றன. எனவே இக்குறித்த வழிகாட்டல் வகுப்புகளில் பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகளினை கலந்து கொண்டு பயன்பெறுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் எஸ். ரி. குமரன் அறிவித்துள்ளார்.

## இன்று நல்லூரில் ஆன்மிக விளக்கவுரை

யாழ்ப்பாணம்,பெப்.2

யாழ். சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியாரினால் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் "கந்தபுராணம்" விளக் கவுரை மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை நல்லூரில் நடைபெற்று வருகின்றது.

மேற்படி விளக்கவுரை இல. 700, பருத்தித்துறை வீதி, நல்லூரில், அமைந்துள்ள "ஞானவேல்" ஆச்சிரமத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை அன்று, ''ஆறுமுகமான பொருள்'' என்ற தலைப்பில் விளக்கவுரை இடம் பெற உள்ளது.

## ஐ.தே.கவின் பிரசாரக் கூட்டம் இரத்தினபுரியில் இன்று

கொழும்பு, பெப்.02

ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பிரசாரக் கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு இரத்தினபுரியில் இடம்பெறவுள்ளது.

இதன்போது நிதி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள மற்றும் ஐக்கிய தேசியக்க கட்சியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள், முன்னாள் சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதய தேவி ஸ்தம்பிப்பு பொதுமக்கள் விசனம்



மட்டக்களப்பு – கொழும்பு உதயதேவி ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளமையால், மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகியுள்ளோம் எனப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து, தினமும் காலை 6.10 மணிக்குக் கொழும்பு நோக்கியும் கொழும்பிலிருந்து தினமும் காலை 6.05 மணிக்கு மட்டக்களப்பு நோக்கியும் சேவையில் ஈடுபட்டு வந்த உதய தேவி ரயில் சேவை, கடந்த 24ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டது.

இயந்திரக் கோளாறு காரணமாக, இந்தப் ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டது எனக் கூறப்பட்ட போதிலும், இன்னும் இந்தச் சேவை மீள ஆரம்பிக்கப்படவில்லை.

இந்தக் காலைநேர ரயில் மூலம், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் உள்ளிட்ட அரசாங்க ஊழியர்கள் பயனடைந்து வந்தனர்.

எனினும் தற்போது இந்தச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளமையால், பொது மக்கள் சிரமத்துக்குள்ளாகியுள்ளனரெனவும் எனவே, கூடிய விரைவில், இந்தப் புகையிரதத்தின் சேவையை ஆரம்பிக்குமாறும், பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (பு)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிந்ததும் பெரிய மாற்றம்



ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

மட்டக்களப்பு,பெப்.02

எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் பின்னர், அரசாங்கத்திலும் அமைச்சரவையிலும் பெரிய மாற்றங்கள் ஏற்படும் என இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு ஏறாவூரில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில், பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அவர் மேலும் உரையாற்றுகையில் –

எதிர்வரும் தேர்தலின் பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அவருடைய பதவியிலிருந்து தூக்கி வீசப்படுவார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தனியான ஆட்சியை அமைக்கும். அதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீமின் அமைச்சுப்பொறுப்பு, மாற்றப்பட்டு கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான முழுப்பொறுப்பும் என்னிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. ஜனாதிபதி, மாகாண நிர்வாகம், அரசாங்கம் உள்ளிட்ட அனைத்து விடயங்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வசமிருக்கும். அந்த அடிப்படையில், அதிகாரமுள்ளவர்களினால் தான் எமது பிரதேசத்தை அபிவிருத்தியினால் கட்டியெழுப்ப முடியும். எனவே ஆட்சி அதிகார தரப்பினருக்கே இத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.

கடந்த 17 வருடங்களாக, வழங்கிவந்த வாக்குகளுக்கு, எமது சமூகம் எதையும் பெறாத நிலையில், தத்தளித்துக்கொண்டிருக்கிறது. இந்தச் சூழ் நிலையில், நாம், ஒன்று படவேண்டிய தேவை எமக்குள்ளது.

ஏறாவூர்ப் பிரதேசத்தில் பல தேவைகள் உள்ளன. அவற்றை நிறைவேற்ற வேண்டிய பதவிகளையும் முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அந்தஸ்தையும் வைத்திருந்தவர்கள் செய்யாத தன் காரணமாகவே, எமது மக்களின் தேவைப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது என்று இதன் போது அவர் மேலும் கூறினார். (பு)

## மகாத்மா காந்தியின் 70ஆவது சிரார்த்த தினம் அனுஷ்டிப்பு



மட்டக்களப்பு,பெப்.02

இந்தியாவின் தேசத்தந்தை என்று போற்றப்படும் மகாத்மா காந்தியின் 70ஆவது நினைவு தினம், மட்டக்களப்பில் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

காந்திசேவா சங்கத்தின் ஏற்பாட்டில், அதன் தலைவர் ஏ.செல்வேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது, காந்திப்பூங்காவிலுள்ள காந்தியின் உருவச்சிலைக்கு மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில், காந்திசேவா சங்கத்தின் தலைவர் ஏ.செல்வேந்திரன், ஏ.சுந்தரேசன் உட்பட, அதன் பிரதிநிதிகள், முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## ஓட்டோ – மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்முனை பிரதான வீதியின் களுதாவளையில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனக் களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின், களுதாவளையில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் ஓட்டோ ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில், மோட்டார் சைக்கிளில் சென்ற 33 வயதுடைய ந.யோகம்பரநாதன் என்பவர் படுகாயமடைந்த நிலையில், களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், சம்பவ இடத்திற்கு விரைந்த களுவாஞ்சிக்குடிப் போக்குவரத்துப் பொலிஸார் இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (பு)

# 361 முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

## ரோஹித போகொல்லாகம தெரிவிப்பு



அம்பாறை,பெப்.02

கிழக்கு மாகாணத்தில் வெற்றிடமாகக் காணப்படுகின்ற 361 முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடங்கள் எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் நிரப்பப்படும் என்றுகிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்திகள் தொடர்பாகவும் மக்களுக்குச் சிறந்த சேவைகள் வழங்கப்படுகின்றதா என்பது பற்றி ஆராய்வதற்காக நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான திடீர் விஜயத்தை மேற்கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மேற்படி விஜயங்களை அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், இறக்காமம் போன்ற பிரதேச சபைகளுக்கு இந்த விஜயங்களை அவர் மேற்கொண்டிருந்தார்.

பிரதேச சபைகளில் அதிகளவான வெற்றிடங்கள் காணப்படுகின்றன எனவும் இதனால் பொது மக்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்கப் பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றோம் எனவும் குறித்த பிரதேச சபைகளின் செயலாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டன. அது மாத்திரமல்லாமல் ஊழியர்கள் பற்றாக்குறையாக உள்ளன எனவும் சுட்டிக்காட்டினர்.

கிழக்கு மாகாணங்களில் காணப்படுகின்ற சபைகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான சகல நடவடிக்கைகளையும் தான் முன்னெடுத்து வருகின்றேன். அதுவரையான காலப்பகுதிகளில் மக்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்குமாறும் ஆளுநர் கேட்டுக்கொண்டார். அபிவிருத்தி செய்யாமல் இருக்கின்ற வீதிகள், பஸ் தரிப்பு நிலையங்கள், மைதானங்கள் போன்ற இடங்களை அபிவிருத்தி செய்யவுள்ளேன் எனவும் தெரிவித்தார். (பு)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலன்னறுவ மாவட்டத்திலேயே அதிகளவு தேர்தல் வன்முறைகள்!

கொழும்பு, பெப். 02

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான வன்முறைகள் அதிகளவில் பொலன னுறுவ மாவட்டத்திலேயே இடம் பெற்றுள்ளன என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது.

பவ்ரல் அமைப்பின் நிறை வேற்றுப் பணிப்பாளர் ரோகண ஹெற்றியாராச்சி இதுதொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த சில வாரங்களில் சட்டத்தை நடைமுறைப் படுத்தும் அதிகாரிகளால் தேர்தல் தொடர்பான வன்முறைகளைக் கட்டுப்படுத்த முடிந்த போதிலும், கடந்த வாரம் தேர்தல் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

இதுவரையில் தேர்தல் வன்முறைகள், மற்றும் விதிமீறல் தொடர்பான 115 சம்பவங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.



## கிளிநொச்சியிலேயே மிகக் குறைவு

இந்த வன்முறைகளில், ஐ.தே.கவின் இரண்டு வேட்பாளர்களும். 3 ஆதரவாளர்களும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு வேட்பாளர் களும், இரண்டு ஆதரவாளர் களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா பொதுஜன முன்னணியின் ஒரு வேட்பாளரும், 3 ஆதரவாளர்களும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் ஒருவரும், சுயேச்சை வேட்பாளர்கள் நால்வரும், தேர்தல் வன்முறைகளால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

பொலன்னறுவ மாவட்டத்திலேயே அதிகளவு தேர்தல் வன்முறைகள் பதிவாகியுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் மிக்க குறைந்தளவு தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(கு)



# இஸ்லாமபாத்தில் இலங்கை உணவு விழா!

கொழும்பு, பெப். 02

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் இலங்கை உணவுவிழா எதிர்வரும் 3 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

பாகிஸ்தானிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இந்த விழா இம் மாதம் 3 ஆம் மற்றும் 4ஆம் திகதிகளில் இரு தினங்களாக இஸ்லாமபாத் மறியெற் ஹோட்டலில் Marriott Hotel நடைபெறவுள்ளது.

இலங்கையின் கலாசார உணவு வகைகளை பிரபல்யப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

இலங்கையின் தலைமை சமையலாளர் செய்க் டாவூட் முகமட் சப்றாஸ் இஸ்லாமபாத் திலுள்ள மறியெற் ஹோட்டல் தலைமைச் சமையலாளர்களுடன் இணைந்து உணவுத் தயாரிப்பில் ஈடுபடவுள்ளார்.



# கோட்டையிலிருந்து நீராவிப் புகையிரதம்!

கொழும்பு கோட்டை யிலிருந்து பண்டாரவளை வரையில் நீராவிப் புகையிரத மொன்று சமீபத்தில் தனது பயணத்தை ஆரம்பித்தது. இந்த ரயில் கடந்த 30ஆம் திகதி பிற்பகல் ஹற்றன் ரயில் நிலையத்தை சென்றடைந்தது.

கொழும்பு கோட்டையிலிருந்து 29 ஆம் திகதிதனது பயணத்தை ஆரம்பித்த நீராவிப் புகையிரதம் அன்று இரவு கண்டி ரயில் நிலையத்தைச் சென்றடைந்தது. இது கண்டியிலிருந்து 30ஆம் திகதி அதிகாலை புறப்பட்டு நானுஓயாவரையில் பயணித்துள்ளது.

இந்தப் பயணத்தின் போது நீராவிப் புகையிரதம் ஹற்றன் ரயில் நிலையத்திலும் நானுஓயாவிலும் நீரை நிரப்பிக் கொண்டது. பின்னர் நானுஓயாவிலிருந்து பண்டாரவளை வரையில் நேற்றுமுன்தினம் புறப்பட்டுச் சென்றது.

ஜேர்மன், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் யப்பான் நாட்டைச்சேர்ந்த வெளிநாட்டு பயணிகள் இதில் பயணித்தனர். ஹற்றன்ரயில்நிலையத்தில்இந்தரயிலைக் கண்டுகளிக்க பல மக்கள் திரண்டிருந்தனர்.

இவ்வாறான ஒரு ரயில் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி பயணித்தமை குறிப்பிடத்தக்கது.

# 4 மணி நேரத்தில் 1,670 பேர் கைது!

கொழும்பு, பெப். 02

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கியதாக முன்னெடுக்கப்பட்ட 4 மணி நேர விசேட நடவடிக்கைகளில் 1670 பேர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் உத்தரவுக்கு அமைவாக, மாகாணங்களுக்குப்பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களின் வழி நடத்தலில் இந்தச் சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போதே இந்த 1670 பேரும் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 11 மணி முதல் நேற்று முன்தினம் அதிகாலை 3 மணி வரை இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இதன்போது நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 308 வீதிச் சோதனைச் சாவடிகள் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டு அவற்றின் ஊடாக 20 ஆயிரத்து 913 வாகனங்கள் மற்றும் 42 ஆயிரத்து 673 பேரைச் சோதனை செய்ததாகவும் பொலிஸ் பேச்சாளர்



ருவன்குணசேகரமேலும்தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட ஆயி ரத்து 670 பேரில் 719 பேர் குடி போதையில் வாகனம் செலுத்திய குற்றத்துக்காக கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பல்வேறு குற்றங்கள் தொடர்பில் 554 பேர் சந்தேகத்தின் பேரிலும், பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 397 பேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட நடவடிக்கையின் போது நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் தொடர்பிலான 420 நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது ஹெரோயின் 13.943 கிராமும் கஞ்சா 11.293 கிலோவும், வேறு போதைப் பொருள்கள் 176 மில்லி கிராமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், சட்டவிரோத மதுசாரம் 3 ஆயிரத்து 860 லீற்றர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

(கு)

# ஐ.தே.கவின் செயற்குழு அவசரமாக கூடுகிறது!

கொழும்பு, பெப். 02

நாடாளுமன்றத்தில் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ள சர்ச்சைக்குரிய இரண்டு விசாரணை அறிக்கைகள் மீதான விவாதம் மற்றும் மாரப்பன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயதானங்கள் குறித்து ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு இன்று அவசரமாகக் கூடுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடவுள்ள மத்திய செயற்குழுவில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னதாக எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெறவிருக்கும் சர்ச்சைக்குரிய பெரிய ஊழல் மோசடி மற்றும் பிணைமுறி தொடர்பான ஜனாதிபதி விசாரணைக்குழு அறிக்கைகள் இரண்டு தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் ஐ.தே.க. எவ்வகையான விடயங்களை பேசுவது என்பது தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடப்படவுள்ளது.

அதன்போது ஐ.தே.க.வின் உப தலைவர் பதவியிலுள்ள ரவி கருணாநாயக்கவை தற்காலிகமாக நீக்கவேண்டுமென திலக் மாரப்பனவின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட குழு முன்மொழிந்துள்ள நிலையில் அது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

மேலும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடக்கவிருக்கும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலின்போது கொழும்பு மாவட்டத்துக்கு பொறுப்பாக விருக்கும் ரவி கருணாநாயக்கவை ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் பதவியிலிருந்து இவ்வாறு தற்காலிகமாக நீக்குவதென்பது கொழும்பு மாவட்ட உள்ளூராட்சி சபை வாக்காளர்கள் மத்தியில் சில குழப்பகரமான சூழலை ஏற்படுத்தும் நிலை காணப்படுவதால் இது தொடர்பாக இக்குழுக் கூட்டத்தில் பெரிய கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகி றது.

அந்தவகையில் இந்த இரண்டு அறிக்கைகள் மற்றும் திலக் மாரப்பன குழுவினால் முன்மொழியப்பட்ட யோசனைகள் தொடர்பாக செயற்குழுக் கூட்டத்தின்போது ஆராயப்படவுள்ளது.

# கடற்கொள்ளையர்களைக் கட்டுப்படுத்தும் செயலகத்தை ஸ்தாபிப்பதற்குத் தீர்மானம்!

கொழும்பு, பெப். 02

சோமாலிய கடற்பரப்பில் கடற் கொள்ளையர்களை கட்டுப் படுத்துவதற்கான சமுத்திர நடவடிக்கைகள் தொடர்பான செயலகத்தினை இலங்கையில் ஸ்தாபிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

சோமாலிய கடற்பரப்பில் கடற் கொள்ளையர்களைக் கட்டுப்படுத்துவதற்காக சர்வதேச இயந்திரமாக "The Contact Gror - tp on Piracy off the Coast of Somalia" எனும் அமைப்பு செயற்பட்டு வருகின்றது. இந்த அமைப்பு



கோப்புப்படம்

2009 ஆம் ஆண்டு ஆரம் பிக்கப் பட்டதாகும்.

இந்த அமைப்பில் இலங்கை ஆரம்பத்தில் இருந்து அங்கத்துவம் வகித்து வருகின்றது. இந்த குழுவின் பணியை முறையாக நிறைவேற்றுவதற்காக அதன் செயலகத்தினை இலங்கையில் ஸ்தாபிப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப் பட்டிருந்தது. அதற் கான அவகாசம் தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது.

சோமாலிய கடற்பரப்பில் கடற்கொள்ளையர்களைக் கட்டுப்படுத்துவதற்கான சமுத்திர நடவடிக்கைகள் தொடர்பான செயலகத்தினை ஸ்தாபிப்பதற் கான தகைமை இலங்கை கடற்படையினருக்கு காணப்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிபாலன சபையினருக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் இந்து ஆலய அறங்காவலர் பரிபாலன சபையினருக்கான கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையில் இடம்பெறும். இந்த நிகழ்வில் சிறப்புரைகளாக "சைவாலயக் கிரியைகள்" எனும் தலைப்பில் வித்தியாசாகரம் சிவஸ்ரீ பஞ்சாட்சரசர்மா சிவானந்தா சர்மாவும் " ஆலய அசையும் அசையாச் சொத்துக்களை பாதுகாப்பது எப்படி" என்னும் தலைப்பில் முன்னாள் மேலதிக பதிவாளர் நாயகம் பிரம்மஸ்ரீ ந. சதாசிவ ஐயரும் "சைவாலயங்களில் மங்கல வாத்தியம்" எனும் தலைப்பில் இந்து சமயப் பேரவையின் ஆஸ்தான வித்துவான் எஸ். இரவீந்திரனும் "சைவாலயங்களின் அறநெறிப் பயிற்சிக்கூடம்" எனும் தலைப்பில் இந்துக்களின் குரல் ஆசிரியர் யோ. துஷ்யந்தன் ஆகியோரும் சிறப்புரையாற்றவுள்ளனர்.

# தினசரி ராசி பலன்
(02.02.2018)

*2018ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் தைத்திங்கள் 20ஆம் நாள் வெள்ளிக்கிழமை து+தியை.பகல் 12.54 மணி வரை பின்னர் திரிதியை.நட்சத்திரம். மகம் பகல் 12.59 மணி வரை பின்னர் பூரம். மரணயோகம் பகல் 12.59 மணி வரை பின்னர் சுபயோகம்.*

**ராகுகாலம்** - *பகல் 10.56 மணி முதல் 12.24 மணி வரை*

**சுபநேரம்** - *காலை 6.35 மணி முதல் 8.03 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *தைமாத தேய்பிறை திரிதியை.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *மகம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். உறவினர்கள், நண்பர்களின் சகாயம் கிடைக்கும்.

**ரிஷபம்** சலனம் மிகுந்த நாள். வருமானம் குறையும். வியாபாரத்தில் லாபம் குறையும். உடன்பிறந்தவர்களிடையே கெடுபிடிகள், நெருக்கடிகள் உருவாகும். மனத்தில் இனம் புரியாத கவலை அதிகரிக்கும்.

**மிதுனம்** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். செய்தொழில் வியாபாரத்தில் வருமானம் குறையும். செலவுகள் அதிகமானதால் நகைகள் அல்லது சொத்துக்கள்அடைவு வைக்க வேண்டும்.

**கடகம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு மேம்படும். தடைப்பட்ட காரியம் கைகூடும். உறவினர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**சிம்மம்** உயர்வான நாள். பணப்புழக்கம் சரளமாக நடக்கும். குடும்ப உறவில் அன்னியோன்யம் அதிகரிக்கும். சகோதர வழி உதவிகள் உத்தியோகத்தில் எதிர்பாராத உயர்வுகள் கிடைக்கும்.

**கன்னி** சலனம் மிகுந்த நாள். பொருளாதாரம் பற்றாக் குறையாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச் சுமை அதிகமாகவும் மேலதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாகவும் நேரும்.

**துலாம்** உயர்வான நாள். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். சுயதொழிலில் முன்னேற்றமும், போதிய வருமானமும் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு கௌரவ பதவிகள் கிடைக்கும்.

**விருச்சிகம்** விருத்தியான நாள். பொருளாதாரம் விருத்தியடையும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். மாணவர்கள் கல்வியில் மேம்பாடடைவார்கள். கொடுக்கல், வாங்கலில் இணக்கம் உண்டாகும்.

**தனுசு** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப கௌரவம் மேலோங்கும். மாணவர்களுக்கு ஆசிரியர்களின் பாராட்டு கிடைக்கும். பதவி உயர்வு ஊதிய உயர்வையும் பெறுவார்கள்.

**மகரம்** கவலையான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் வீண் வாக்கு வாதங்கள் உண்டாகும். பயணத்தின் போது கைப் பொருள்கள் தொலைந்து போகும்.

**கும்பம்** மத்திமமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். கடன்படும் நிலை உண்டாகும். தேகசுகம் ஓரளவு சீராக இருக்கும். செய்யும் தொழில் குறைந்த வருமானம் கிடைக்கும்.

**மீனம்** நன்மையான நாள். பொருளாதாரத் தேவகைளை பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும். சகோதர உறவு வலுவடையும். இதுவரை வாட்டி வதைத்த நோய்கள் நீங்கும்.

**சந்திராட்டமநாள்:உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# பிரதான கட்சிகளின் எதிர்கால அரசியலை உள்ளூராட்சி தேர்தல் நிர்ணயிக்கும்!

## இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 02

நாட்டின் பிரதான கட்சிகளுக்கு எதிர்கால அரசியல் எவ்வாறு அமையும் என நிர்ணயிக்ககூடிய தேர்தலாக இந்த உள்ளூராட்சி சபை தேர்தல் மிக முக்கியமானதாக காணப்படுகின்றது என கல்வி இராஜாங்க அமைச்சரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பலாங்கொடை இம்புல்பே பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரிக்கும் முகமாக றைதோட்டம் கெபொக்பிரிவில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அமைச்சர் இராதாகிருஸ்ணன் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த நல்லாட்சி அரசின் மூலம் இந்த நாட்டில் இனி பிரச்சினைகள் இடம்பெறுவதற்கு இடமில்லை. யாழ்ப்பாணத்திலேயே இன்று பிரச்சினைகள் இல்லை என்றால் மலையகமக்களுக்கும் ஏனைய சமூகத்தினருக்கும் பிரச்சினைகள் வராது.

எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்த உள்ளூராட்சி சபை தேர்தல் எதிர்கால அரசியலை தீர்மானிக்க கூடிய ஒரு முக்கியமான தேர்தலாகும்.

ஜனாதிபதித் தேர்தலை விட இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் மிக அவசியமானதாக காணப்படுகின்றது. ஒரு புறம் ஒரு நாளுக்கு பிரதமர் பல கூட்டங்களுக்குச் செல்கின்றார். மறுபுறம் ஜனாதிபதி ஒரு நாளுக்குப் பல கூட்டங்களுக்கு செல்கின்றார்.

நாட்டின் பிரதான கட்சிகளுக்கு எதிர்கால அரசியல் எவ்வாறு அமையும் என நிர்ணயக்ககூடிய தேர்தலாக இது காணப்படுகின்றது. இதனாலேயே இவர்கள் பல கூட்டங்களுக்குச் செல்கின்றனர்.

ஆதலால் தமிழர்கள் இதில் முழுப்பயனை அடையக்கூடிய வகையில் தங்களது வாக்குகளை அந்தந்த பிரதிநிதிகளுக்கு அளித்து பிரதிநிதிகளை வெற்றிபெறச் செய்வதன் மூலம் தான் தமது தன்மானத்தை காப்பாற்றிக்கொள்ள முடியும்.

ஆகவே இந்தத் தன்மானத்தை காப்பாற்ற ஒருமித்து எல்லோரும் ஒன்று சேர்ந்து தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இல்ல மெய்வன்மைப் போட்டி

நெல்லியடி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் உல்லியனொல்லை ஆலய முன்றலில் பாடசாலை அதிபர் ந. தேவராஜா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி சுகாதார அதிகாரி சி. சுதோகுமார், சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு பொது வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் க. சத்தியமூர்த்தி, வடமராட்சி வலயக் கல்வி அலுவலக மும்மொழி இணைப்பாளரும் சிங்களஆசிரிய ஆலோசகருமான சாள்ஸ் லாசரஸ் ஆகியோர் கலந்து கொள்வர்.

★★★

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று 2 ஆம் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி அதிபர் எம்.இந்திரபாலா தலைமையில் மைதானத்தில் இடம்பெறும்.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவன் வைத்திய கலாநிதி பி.ரி. ஜெயவிக்கிரமராஜா, சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராஜா, கௌரவ விருச்தினராக பழைய மாணவன் சித்த வைத்தியசாலையின் மருத்துவ உத்தியோகத்தர் ரி. விஜயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர்.

★★★

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணியளவில் மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய வீதியில் வித்தியாலய அதிபர் திருமதி. சு. சிவமலர் தலைமையில் இடம் பெறும். இதில் வித்தியாலய பழைய மாணவி (கனடா)திருமதி விஜயதேவி கனகசபை, வித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி. சிவகலை இரத்தினகோபால் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

★★★

பளை வேம்பொடு கேணி சி.சி.த.க பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் பாடசாலை மைதானத் தில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பச்சிலைப் பள்ளி உதவிப் பிரதேசச் செயலர் க. சந்திரசேகரனும், சிறப்பு விருந்தினர்களாக பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஐ.கு கானந்தராஜா, பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எஸ். டபிள்யூ. ரஞ்சன்பண்டார ஆகியோரும் மதிப்புறு விருந்தினர்களாக இத்தாவின் கிராம அலு வலர் சி. வல்லிபுரம், வேம்பொடுகேணி கிராம அலுவலர் சி. நிமலகாந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை சனிக்கிழமை காலை7.30 மணியிலிருந்து மாலை 6 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் –**

வலந்தலை சந்தி, சிவகாமி அம்மன் கோவிலடி, ஆலடி, மருதபுரம், வியாவில், கருங்காலி, காரைநகர் சிவன் கோவிலடி, பொன்னாலை கிருஸ்ணன் கோவிலடி, பொன்னாலை வீட்டுத்திட்டம், உரும்பிராய் விளாத்தியடி லேன், உரும்பிராய் மானிப்பாய் வீதி, அங்கிலிப்பாய், பருத்தித்துறை நகரம், சாரையடி, கிராமக்கோடு, கல்லூரி வீதி, வி.எம் வீதி, தம்பசிட்டி, சாளம்பை, வல்லிபுரம், உபயகதிர்காமம், புனிதநகர், கற்கோ வளம், மாதனை, நெல்லண்டை, பருத்தித் துறை வெளிச்சவீடு, சிவப்பிரகாசம், 3ம் குறுக்குத் தெரு மற்றும் 4ம் குறுக்குத்தெரு பிரதேசம், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, பொன்னாலை கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, சுன்னாகம் சிவன் கோவிலடி பிரதேசம், சூராவத்தை, மயிலங்காடு, குப்பி ளான், ஏழாலை, கட்டுவன், ஊரெழு, புன்னாலைகட்டுவன், குரும்பசிட்டி, வசாவிளான், ஈவினை, வாகையடி, அச்செழு, மாசுவன் சந்தி, புன்னாலைக்கட்டுவன்வடக்கு விக்கிரமரட்ண பிறைவேற் லிமிற்ரெட், சுன்னாகம் இலங்கை தொலைத் தொடர்பு நிலையம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்-**

கோவில்குளம், ஆச்சிபுரம், சமணன்குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்பமரு தங்குளம், பெரியகூமரசங்குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம், நீலியமோட்டை ஆகிய பிரதேசங்களிலும் –

மின்விநியாகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித் துள்ளார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வாக்கினால் பதவிக்கு வந்த நல்லாட்சி அரசும் பாசாங்குதான்

## பிரச்சினைகளுக்குத் தீர்ப்பதற்கு அவர்களுக்கு அறவே மனமில்லை என்கிறார் வடக்கு முதலைமைச்சர்



எமது வாக்கினால் பதவிக்கு வந்த இன்றைய அரசு உடனேயே எமது பிரச்சினைகளைத் தீர்த்திருக்க வேண்டும். எல்லாம் பாசாங்கு தான். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அவர்களுக்கு மனமில்லை. இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

வாராந்தம் தனக்குக் கிடைக்கும் கேள்விகளில் ஒன்றைத் தெரிவு செய்து பதிலளித்து வருகிறார் வடக்கு முதல்வர். அதில் இவ்வாற கேள்வி – பதில் வருமாறு:–

**கேள்வி**- வடக்கு மக்களுக்கு அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கும் உதவிகளை நீங்கள் புறக்கணிக்கின்றீர்கள் என்று கூறப்படுகிறதே? அதற்கு உங்கள் விளக்கம் என்ன?

**பதில்** - எதனை நாங்கள் புறக்கணித்தோம்? எதனையும் நாங்கள் புறக்கணிக்கவில்லை. ஆனால், அவ்வாறான பேச்சுக்கள் எழ காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. சில மாதங்களுக்கு முன் ஒரு முக்கியமான நாடாளுமன்ற உறுப்பினர் என்னிடம் யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்கக் காணி வேண்டும் என்று கேட்டார். நாங்கள் மண்டைதீவில் காணியை அடையாளப்படுத்தி எங்கள் மற்றைய அலுவலர்களுடன் சென்று எனது பிரத்தியேகச் செயலாளர் காணியைக் காட்டினார்.

பின்னர் காணியைத் தமக்கு மாற்றித் தரும்படி கேட்டார். அதற்கு நான் இசையவில்லை. நாம் இந்த செயற்றிட்டத்தை பங்குதாரர்களாகச் செய்வோம் என்றேன். அப்படியில்லை, வெளிநாட்டில் இருந்து கோடிக்கணக்கான பணம் கிடைக்கப்போகின்றது, ஆகவே காணியை எமது பெயருக்கு மாற்றினால்த்தான் அவர்களுடன் பேசிப் பணம் பெறமுடியும் என்று கூறினார். நாங்கள்தானே நன்மை அடையப்போகின்றவர்கள், எம்முடன் சேர்ந்து நடைமுறைப்படுத்தினால் தான் பொருந்தும் என்றேன்.

ஏற்கனவே இவ்வாறான கிரிக்கெட் மைதானங்கள் நாட்டின் வேறு இடங்களில் கட்டப்பட்டு அவை போதுமானவாறு பாவிப்பில் இருப்பதாகத் தெரியவில்லை. அவை சம்பந்தமாக பலவிதமான குற்றச்சாட்டுக்களையும் பலர் கூறக்கேட்டுள்ளேன். ஆகவேதான் எமது கட்டுப்பாட்டுக்குள் இந்தச் செயற்றிட்டம் இருக்க வேண்டும் என்று நினைத்தேன்.

பல மாதகாலம் இதுபற்றி எதுவும் அவர் பேச முன்வரவில்லை. மிக அண்மையில் ஆளுநருடனும் யாழ் அரசாங்க அதிபருடனும் அதே காணியைப் பார்க்கப் போயிருந்தார் எனப் பத்திரிகையில் வாசித்தேன்.

காணியை விடுவிக்க அவர்கள் என்னிடம் வர வேண்டும் என்ற படியால் நான் வாளாதிருக்கின்றேன். இவ்வாறான நடவடிக்கைகள் உங்களுக்கு எமது புறக்கணிப்பாக எடுத்துக் கூறப்பட்டனவோ எனக்குத் தெரியாது.

நாங்கள் சில தருணங்களில் வெளிப்படையாகவும் பொறுப்புக் கூறலுக்கு மதிப்பளித்தும் நடவடிக்கைகளைக் கொண்டு நடத்த முற்பட்டால் அது அரசாங்க உறுப்பினர்களையுந்தான், தனியார் துறையினரையுந்தான் சற்று பின்வாங்க வைக்கின்றது. காரணம் பலர் பிழையான நடவடிக்கைகளுக்குப் பழக்கப்பட்டு விட்டார்கள். வெளிப்படைத்தன்மையைப் புறக்கணிக்கின்றார்கள். அதற்கான காரணத்தை யூகிக்கலாம்.

தனிப்பட்ட நன்மைகளைப் பெற தரப்பார் ஏங்குகின்றார்கள் என்பதே காரணமாக இருக்க முடியும். ஆகவே வடமாகாண மக்களுக்குக் கிடைக்கும் உதவிகளைப் புறக்கணிக்க நாங்கள் மக்கள் கரிசனை அற்றவர்கள் அல்லர். அதே நேரத்தில் எம்மை வஞ்சித்து சுரண்டிச் செல்லவும் விடமாட்டோம்.

இது விடயமாக வேறு சில விடயங்களை இத்தருணத்தில் கூறவேண்டியுள்ளது. உதாரணத்திற்கு இன்றைய (31.01.2018) தமிழ் மிரரின் பக்கம் 3 ஐப் பாருங்கள். வடகிழக்கு மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்ற தலையங்கத்தின் கீழ் மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் வட கிழக்கு மக்களுக்கு நன்மை பயப்பதான சில திட்டங்களை நடைமுறைப்படுத்தப் போகிறார் என அறிவித்துள்ளார்.

அதைக் கவனமாக வாசித்துப் பார்த்தால் யாருக்கு இந்த உதவிகளை பெற்றுக் கொடுக்க அவர் விருப்பமாக இருக்கின்றார் என்பது புரியும். மொரகஹகந்த திட்டத்தின் கீழ் நடைமுறைப் படுத்தப்படும் வடமேல் கால்வாய் அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி பெறப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

மொரகஹகந்த திட்டம் பல வருடங்களுக்கு முன்னர் திட்டமிடப்பட்டது. ஆனால், மகாவலி நதியின் ஒரு சொட்டு நீர் கூட வடமாகாணத்திற்கு இதுவரை வரவில்லை. ஆனால், வரவிருக்கும் நீரை மேற்கோள் காட்டி எல் வலயம் என்ற வலயத்தைத் திறந்து அங்கு சிங்களக் குடியேற்றங்கள் ஏற்கனவே நடைபெற்றுள்ளன. ஆகவே வடகிழக்கு மக்களுக்கு நன்மைகள் கிடைக் கும் என்று கூறப்பட்டதாயினும் வடகிழக்கில் உள்ள சிங்கள பலவந்தக் குடியேற்ற வாசிகளின் நன்மையையே அது குறிக்கின்றது.

இன்னொன்றைக் கூறுகின்றேன். பலவிதமான பிரச்சினைகளை எங்கள் மக்கள் எதிர்நோக்கியிருக்கும் வேளையில் அண்மையில் ஓர் அமைச்சர் வன்னியில் 600 ஏக்கர் காணியை திறந்த மிருகக் காட்சிப் பூங்கா அமைக்க விட வேண்டும் என்று கேட்டி ருந்தார். அதாவது சுற்றுலாப் பயணிகள் ஸ்ஃபாரி (Safari) எனப்படும் மிருகக் காட்சி பெற சவாரியில் செல்லக்கூடிய விதத்தில் ஒரு பூங்கா அமைக்கக் கேட்டிருந்தார். யானைகளின் நடைபவனிப் பாதை செல்லும் வழியை ஆராய வேண்டியிருந்தது. வன மிருகங்கள் இவ்வாறான சவாரிகள் அமைப்பதால் சுற்றியுள்ள கிராம மக்களுக்கு எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்துவன என்ற விடயம் பரிசீலிக் கப்பட வேண்டியிருந்தது.

இவற்றையெல்லாம் பரிசீலிக்காது யாரோ கேட்டார் என்பதால் நாம் கொடுக்க முன்வந்தோமானால் அதில் எங்காவது சில சிக்கல்கள் ஒளிந்து கொண்டிருக்கும் என்பதை நாங்கள் புரிந்து கொண்டிருந்தோம். ஆகவே, எனது தாமதம், நான் அவர்கள் செயற்றிட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றேன் என்று அமைச்சரை வெளிப்படையாகக் கூற வைத்தது.

அடுத்து இன்னுமொரு நிகழ்வு. சில வருடங்களுக்கு முன்னர் மத்தியுடன் சம்பந்தப்பட்ட அமைச்சர் ஒருவர் உரிய அறிக்கைகளைப் பெறாது, தக்கதா அந்தச் செயற்றிட்டம் என்பதை ஆராயாமல் எமது தீவகப் பகுதியில் 30 தட்டுகளுக்கும் மேலான அடுக்கு மாடிக் கட்டடத்தைச் சுற்றுலா உணவகத் தங்குமிடத்திற்காகத் தேர்ந்தெடுத்து அஸ்திவாரமும் வெட்டத் துணிந்தார்.

அதிர்ஷ்டவசமாக எமது அப்போதைய அமைச்சர்களுக்கு அது தெரியவந்து அந்தச் செயற்றிட்டம் நிறுத்தப்பட்டது. முப்பதுக்கு மேற்பட்ட அடுக்கு மாடிக் கட்டடத்தை எமது தீவுகளில் கட்ட முயன்றால் தீவுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களை நாம் மிக உன்னிப்பாக ஆராய வேண்டும். பணம் சம்பாதிக்கலாம் என்று இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டால் எமது மக்களும் அவர்களின் வாரிசுகளுமே காலக்கிரமத்தில் பாதிக்கப்படப் போகின்றவர்கள் என்பதை நாம் உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

அரசு வருமானம் ஈட்டுதலை மட்டுமே ஒரேயொரு குறிக்கோளாக வைத்து சில தருணங்களில் செயற்றிட்டங்களை வடமாகாணத்திற்கு வகுக்கின்றார்கள். அதுதவறு. எமது சுற்றுச்சூழல், சீதோஷ்ண நிலை, கலை கலாசாரப் பின்னணி, எமது வாழ்க்கை முறை, எமது எதிர்பார்ப்புக்கள் போன்ற பலதையும் கணக்கில் எடுத்தே இவற்றை வகுக்க வேண்டும். இதற்காகத்தான் சட்டம் பலவிதமான அறிக்கைகளைக் கோரி நிற்கின்றது. சுற்றுச் சூழல் அறிக்கை, கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்கள அறிக்கை என்ற பலதையும் சட்டம் எதிர்பார்க்கின் றது. எம்மவர் இவற்றையெல்லாம் புறக்கணித்துத் தமக்குத் தனித்துவமாகக் கிடைக்க இருக்கும் நன்மைகளை முன்வைத்தே தீர்மானங்களை எடுத்து வந்துள்ளார்கள் போலத் தெரிகின்றது. பதவி இருந்தால் எதையும் செய்யலாம் என்ற தப்பப்பிராயத்தை நாங்கள் இனியேனும் நீக்கிக் கொள்ள வேண்டும். பின்பற்றி நடக்கவே சட்டம் என்றொன்று உண்டு.

செலவைக் குறைக்க சில ஒப்பந்தக்காரர்கள் குறைபாட்டுடன் பள்ளிக் கூடக் கட்டடங்களைக் கட்டி எழுப்புகின்றார்கள். சில வருடங்களில் அவை பழுதடைந்து வீழ்ந்து சில நேரங்களில் குழந்தைகளின் உயிர்களையும் பறித்து விடுகின்றன. நாம் வருங்காலத்தை யோசிக்காது உடனே கிடைக்கும் நன்மைகளை மட்டும் பார்த்தோமானால் அது பல சிக்கல்களை எமக்கு உண்டாக்கும்.

அரசாங்க உதவிகளை நாங்கள் இன்னொரு கண்கொண்டும் நோக்க வேண்டியுள்ளது. பெரும்பான்மை அரசாங்கங்கள் எந்தக் காலத்திலும் எமது உரித்துக்களை முழுமையாகத் தரப் போவதில்லை என்பதே எனது கணிப்பு. தருவதாகக் கூறுவதெல்லாம் பாசாங்கு. தருவதாக இருந்தால் எம்முடைய வாக்கின் நிமித்தம் பதவிக்கு வந்த இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்த உடனேயே எமது பிரச்சினைகளைத் தீர்த்திருக்கும். தீர்க்க மனமில்லை. தருவோம் தருவோம் என்பார்கள் ஆனால் தரமாட்டார்கள்.

ஆனால் ஏதோ ஒரு நிறுவனத்தின் பணத்தை எமக்குச் செலவழிக்க முன் வருவார்கள். உதாரணத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணத்தைத் தருவதாகக் கூறுவார்கள். அவர்களுக்கு அந்தப் பணம் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கின்றது என்று கூறித் தாம் எமக்காகக் கடன்பட்டுள்ளதாகக் கூறுவார்கள். ஆனால் எமது உரிமைகள் எவற்றையுந் தர மறுப்பார்கள்.

ஆகவே தரவருபவர்களின் தானத்தின் தாற்பரியங்களை நாம் புரிந்து கொள்ளவேண்டும். எமது உரித்துக்களைத் தராது விடுத்து எமக்கு பொருளாதார உதவிகள் பலதையும் அளித்து எம்மைத் தம் கட்டுப்பாட்டுக்குள் நிரந்தரமாக வைத்திருப்பதை எமது மக்கள் விரும்புகின்றார்களா என்பதை முதலில் நீங்கள் ஆராய்ந்து பாருங்கள்.

என்னைப் பொறுத்த வரையில் எமது உரிமைகளே முதன்மையுடையவை. மற்றவை யாவும் பின் செல்பவை.

உதவிகள் பெற்றுக்கொண்டால் நாம் அவர்களுக்குக் கடமைப்பட்டுவிடுகின்றோம். அதன் பின் சிங்களக் குடியேற்றம், படையினர் தொடர் வசிப்பு, மீன்பிடியில் தென்னவர் ஆக்கிரமிப்பு என்று பலதையும் நிரந்தரமாக்கி விடுகின்றார்கள். நாம் பேசா மடந்தைகளாகக் கை கட்டி வாய் புதைத்து நிற்கின்றோம்.

எனினும் உதவி கள் எமக்குத் தேவை. கட்டாயந் தேவை. மனிதாபி மானத்துடன் தரப்படும் உதவி களை நாம் பெற்று வருகின்றோம்.

மேற்கூறிய எனது கருத்துக்களே நான் மத்தியின் உதவிகளைப் புறக்கணிக்கின்றேன் என்று கூற வைத்திருக்க வேண்டும். நான் புறக்கணிக்க வில்லை. நாம் பங்குதாரர்களாகச் செயற்றிட்டங்களில் பங்காற்ற வேண்டும் என்ற எமது உரிமை சார்ந்த கருத்துக்களை வலியுறுத்தியிருக்கின்றேன். அவ்வளவு தான்.

தென்னாபிரிக்காவில் முதலில் அரசியல் பிரச்சினைகளைத் தீர்த்தார்கள். அதன் பின்னரே உண்மைக்கும் நல்லுறவுக்குமான ஆணைக்குழுவை அமைத்தார்கள். நாம் முதலில் எமது உரித்துக்களை உரியவாறு பெற்றுக் கொள்ளாது விட்டால் காலக்கிரமத்தில் உங்களுக்கு நாம் அது தந்துவிட்டோம் இது தந்துவிட்டோம் என்று கூறி மேலும் எதுவும் அரசியல் ரீதியாகத் தரமுடியாது என்று கைவிரித்து விடுவார்கள். அரசாங்கங்களோ தனியார்களோ கொண்டுவரும் சகல செயற்றிட்டங்களையும் உன்னிப்பாகக் கவனித்தே நடவடிக்கை எடுத்து வருகின்றோம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பியத் தலைவன் அமரர் பேராசிரியர் மகேஸ்வரன்

## சிறந்த ஆசிரியராக மட்டுமன்றி ஆளாக்குபவராகவும் திகழ்ந்தவர்

**கலாநிதி நா.சிவபாலன்**
(இரசாயனவியல் சிரேஷ்ட விரிவுரையாளர்) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

எமது வாழ்வின் முக்கியமான பகுதியில் இவ்வுலக வாழ்வை நீத்த இருவரின் நினைவுகள் எழும்போதெல்லாம் எனது கண்களிலிருந்து நீர் வடியும். எனது பாதுகாவலனாக இருந்த எனது மூத்த சகோதரன் அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இரசாயனத்துறையின் ஆரம்பத் தலைவராகவும், இப் பல்கலைக்கழகத்தின் முன்னோடிகளில் ஒருவராகவும் திகழ்ந்த பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரன் மற்றையவர்.

எமது அன்புக்குரிய பேராசிரியரின் 20ஆவது நினைவு தினம் இன்றாகும் (02.02.2018). அவரது தனித்துவமான, உயர்ந்த வாழ்வின் சில அம்சங்களை நினைவுகூருவதற்கான முயற்சியே இக் கட்டுரையாகும்.

காப்பியத் தலைவன் இளமையிலேயே இறப்பது என்பது மேற்கத்தைய இலக்கிய மரபில் காப்பியத் தலைவனுக்கான இலக்கணங்களில் ஒன்று. இதனால் நினைவுகூரப் படும் போதெல்லாம் என்றென்றும் இளமையானவனாகவும், அழகானவனாகவும், தனது குறுகிய கால வாழ்வில் பலரின்வாழ்வில் ஓர் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தியவனாகவும்காப்பியத் தலைவன் காட்சியளிக்கிறான். பேராசிரியர் மகேஸ்வரனும் உண்மையில் ஒரு காப்பியத்தலைவனே.

என்னைப் பொறுத்தவரை பேராசிரியர் மகேஸ்வரன் ஓர் உயிர்ப்பூட்டும் ஆசிரியர், உயர்ந்த ஆளாக்கி, நம்பிக்கையான நண்பர், கரவேதுமற்ற நலம்நாடி. பேராசிரியர் மகேஸ்வரன் ஆசிரியராகவும், ஆளாக்குபவராகவும் கிடைத்தது எனக்கு இறைவன் கொடுத்த வரமாகும்.

**ஆரம்பத் தலைவர்**

1970ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் முன்னோடிகளில் ஒருவராக இணைந்த பேராசிரியர் மகேஸ்வரன் 1998இல் உரிய காலத்திற்கு முன்பே மரணமாகும்வரை அங்கு பணிபுரிந்தார். பல்கலைக்கழகத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் மிக இளையவரான இவர் அவர்களில் மேன்மையானோரில் உயிர்த் துடிப்பும், செயலாற்றுத் திறனும் மிகக் கொண்ட ஒருவராக விளங்கினார்.

இரசாயனத் துறையின் ஆரம்பத் தலைவரான இவர் தகுதி வாய்ந்த பட்டதாரிகளை உருவாக்க சோர்வின்றிப் பணிபுரிந்தார். ஆரம்ப காலங்களில் இத்துறையானது யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரிப் பிரிவில் மிகக் குறைந்த வளங்களுடன் இயங்கியது. இக்குறைபாடுகளைத் தனது கடின உழைப்பினால் சமன் செய்தார்.

இரசாயனத்துறைக்கு முதன்முதலில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் ஒருவனாக நானும் இருந்தேன். எமது கல்வியிலோ, சொந்த வாழ்விலோ பிரச்சினைகள் ஏற்பட்ட போதெல்லாம் அக்கறையுடன் செவிமடுப்பவராக அவர் இருந்தார் தனது நேரத்தையும் உள்ளார்ந்த தூண்டுதலையும் பெருந்தன்மையுடன் எமக்கு வழங்கினார்.

தனதுவழமையான கடமைகளுடன், பல்கலைக்கழகத்தின் திருநெல்வேலி வளாகத்தில் கட்டப்பட்டு வந்த இரசாயனத் துறையின் கட்டட வேலைகளை அவர் மேற்பார்வை செய்த விதம் இன்றும் பலர் சொல்லி அதிசயிக்கும் கதையாகவுள்ளது. ஒரு முறை சிமெந்துக் கலவை இயந்திரத்தினுள் கொட்டப்படும் மண், கல், சிமெந்து என்பனவற்றின் அளவுகளை வளாகத்தினுள் தூரத்தேயுள்ள இன்னொரு கட்டடத்திலிருந்து அவர் கவனித்துக் கொண்டிருந்தார்.

அவைசேர்க்கப்பட வேண்டிய விகிதங்களில் இல்லாததைக் கண்டவுடன் உடனடியாக வேலைத் தலத்திற்குச் சென்று அந்தக் கலவை பயன்படுத்தப் படுவதைத் தடுத்து நிறுத்தினார்.

அவரேகட்டடம் மற்றும் அதில்பொருத்தப்பட வேண்டிய தளபாடங்கள் பற்றிய சகல விவரங்களையும் திட்டமிட்டார். திட்டமிட்ட படியே அவை நிறைவேற்றப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்தினார். பார்த்தவுடன் மனதில் பதியும் இக் கட்டடத்தின் ஒவ்வொரு பகுதியும் அவர் செய்த பகீரதப் பிரயத்தனத்தை நினைவுபடுத்துகின்றன. அவர் 1998இல் மரணமடைந்தவுடன் பல்கலைக்கழகம் காலமேதும் தாழ்த்தாமல் மிகப் பொருத்தமாக அக் கட்டடத்திற்கு மகேஸ்வரன் மண்டபம் எனப் பெயரிட்டது.

பல்கலைக்கழகத்தின் நற்பெயரிலும், மாணவர்களின் நலத்திலும் அவர் காட்டிய அக்கறையினால் அவருடன் வேலை செய்தவர்களும் அத்தகைய கவனத்தைக் கொண்டிருந்தனர். ஒரு பெருந் தலைவனுக்குரிய பண்புடன் சொல்லினால் அல்லாது செயலினால் அவர் வழிகாட்டினார். தமது சுயநலத்திற்கு முதலிடம் கொடுக்கும் எவரும் ஒரு பொது நிறுவனத்திற்கு நிலையான பங்களிப்பை வழங்க முடியாது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு மகேஸ்வரன் வழங்கிய பங்களிப்புகள் அவரின் சுயநலமற்ற சேவையைப் பறைசாற்றுகின்றன.



**கற்பித்தல்**

பேராசிரியர் மகேஸ்வரனுக்கு தனது பாடத்தில் ஆழ்ந்த ஈடுபாடு இருந்தது. அதனை அவர் ஊக்கத்துடனும், உயிர்த் துடிப்புடனும் மாணவர்களுக்குப் புகட்டினார். ஒரு பாடப் பொருளை அவர் செய்திகளாகவோ அல்லது தகவல்களின் தொகுப்பாகவோ போதிப்பதில்லை. அந்த விடயம் ஒரு பாடப் பொருளாக வருவதற்கு காரணமாக எமது அறிவுப் பரப்பிலிருந்த குறைகள், பகுத்தறிவிற்குப் பொருத்தமான உரம் வாய்ந்த நியாயங்களுடன் அதன் வளர்ச்சி என்பன மூலம் அப் பாடத்தின் மெய்ப்பொருளை எம்மை உணர வைப்பார்.

அவர் விசேடபயிற்சி பெற்ற பாடப் பிரிவாக இருந்தாலும் சரி,போதிய விரிவுரையாளர்கள் இல்லாதகாரணத்தால் அவர் கற்பிக்க வேண்டி வந்த பாடப் பிரிவாக இருந்தாலும் சரி அவற்றை ஒரே தரத்தில் வளமூட்டும் விதமாகக் கற்பித்தார். அவரது வகுப்புகளில் விஞ்ஞானம் ஒருபோதும் ஒரு புதிராக இருந்ததில்லை.

அவரது பரீட்சை வினாக்கள் துல்லியமானவையாகவும், பொருத்தமான தரத்தில் அமைந்தவையாகவும், தெளிவின் அடிப்படையில் மாணவர்களை வேறுபடுத்தக் கூடியவையாகவும் இருந்தன. ஒரு மாணவன் பெற்ற பெறுபேறு அந்த மாணவனுக்குரியது என்பதை நிச்சயப் படுத்துவதுடன் ஆழ்ந்த கற்றலை ஊக்குவிப்பனவாகவும் அவரது வினாக்கள் அமையும்.

போரின் பேரிடர்களுக்கு மத்தியிலும் மிக வுயர்ந்த தரத்தைப் பேணியதாக இங்கிலாந்தின் வெளிவாரிப் பரீட்சகர்களால் அவர் எப்போதும் மெச்சப்பட்டார்.

**நிர்வாகம்**

பேராசிரியர் மகேஸ்வரன் இரசாயனத் துறையின் தலைவராக மிக நீண்ட காலம் பணி புரிந்தார். விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாக இரண்டு தடவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டார். இது நடைபெற்றது போரின் இடர்மிக்க காலப்பகுதிகளில் ஒன்றிலாகும். அக் கால கட்டத்தில் கருத்துறுதியுடனும், சாமர்த்தியத்துடனும், மிகுந்த அவதானத்துடனும்துறையையும்பீடத்தையும் வழிநடத்தினார். பல்கலைக்கழகப் பேரவையின் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினராக இருந்தமையுடன் பல சபைகளிலும் குழுக்களிலும் பணிபுரிந்தார்.

கொள்கையின் அடிப்படையில் பணிபுரியும் ஒருவராகவும், தனது கொள்கைகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் விட்டுக் கொடாத ஒருவராகவும் தன்னைப் பற்றிய அழிக்க முடியாத அடையாளம் ஒன்றை இந்தப் பதவிகள் யாவற்றிலும் விட்டுச் சென்றுள்ளார். அவரது கொள்கைகள் ஒழுங்கு விதிகளையும், துணைவிதிகளையும் வெறுமனே பிரயோகிப்பதை அடிப்படையாகக் கொண்டனவல்ல மாறாக அந்தச் சட்டங்களும் விதிகளும் உருவாக்கப்பட்டமைக்குக் காரணமான பகுத்தறிவுச் சிந்தனைகளை ஆதார மாகக் கொண்டவை. விதிகளைப் பொருள் விளக்கம் செய்யும்போது விதிகளில் உள்ள தெளிவின்மை தரத்தை மங்கச் செய்யாமல் இருப்பதை உறுதிசெய்தார்.

அதேசமயத்தில் விதிகள், ஒழுங்கு முறைகள்,மரபுகள் மற்றும் கடந்தகால நடை முறைகள் என்பவற்றை நன்கறிந்திருந்ததுடன் அவற்றை எந்த நேரத்திலும் எடுத்துரைக்கக் கூடியவராக இருந்தார். நீதியை நிலைநாட்டுவதற்குத் தன்னை அர்ப்பணித்தாலும் மாணவர்களினதும், ஊழியர்களினதும் பிரச்சினைகளை புரிந்து அவற்றை அனுதாபத்துடனும் அணுகினார்.

கறைபடியாத நாணயத்தைக் கொண்ட பேராசிரியர் மகேஸ்வரன் தனது செயல்கள் யாவற்றிலும் ஒளிவு மறைவற்ற போக்கைக் கடைப்பிடித்தார். தனது வாதங்கள் பலருக்கு அதிருப்தியைக் கொடுத்தாலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கல்வியிலும் நிர்வாகத்திலும் உயர்ந்த தரத்தைப் பேண வேண்டுமென்பதில் விடாப்பிடியாக இருந்தார்.

மனிதனின் செயல்கள் யாவற்றினதும் நோக்கம் தன்னை அறிவதற்காகவே இருக்கவேண்டும் என்பது ஏ. ஜே. குரோனின் (A.J.Cronin) இன் வார்த்தைகளாகும். தன்னை அறிந்தவர்களுக்கு தோல்வி என்பதில்லை. பேராசிரியர் மகேஸ்வரன் இதன் எடுத்துக்காட்டாக இருந்தார்.

**மாணவர் நலச்சேவைகள்**

இத்தகைய மனிதர் ஒருவர் இரத்தத்துடனும் சதையுடனும் எம் மத்தியில் வாழ்ந்தார் என்பதை இனிவரும் தலைமுறைகள் அரிதாகவே நம்பும். மகாத்மா காந்தியைப் பற்றிய அல்பேட் ஜன்ஸ்ரைனின் வரிகள் இவை. இந்த வரிகள் அப்படியே பேராசிரியர் மகேஸ்வரனுக்கும் பொருந்தும்.

தனது மாணவர்களின் பெயர்கள், சுட்டிலக்கங்கள், பாட சேர்க்கைகள், நேர அட்டவணைகள், குடும்பப் பின்னணிகள் என அனைத்தும் அவரின் நினைவிலிருந்தன. சில நேரங்களில் மாணவர்கள் வகுப்பைப் புறக்கணித்து விட்டு நகரத்தினுள் அலைவதுண்டு. அப்போது பேராசிரியர் மகேஸ்வரன் அவர்களைக் காண நேர்ந்தால் அவர்களுக்கு அந்த நேரம் இருக்கும் பாடங்களை நினைவூட்டி, அவர்கள் ஏன் பாடங்களுக்கு சமுகமளிக்கவில்லை என்று கேட்கும் கரிசனை அவருக்கு இருந்தது.

நான் ஓர் இளைய ஆசிரியனாகவும் அவர் துறைத் தலைவராகவும் இருந்த காலங்களிலும், நான் துறைத் தலைவராகவும் அவர் பீடாதிபதியாகவும் இருந்த காலங்களிலும் திருத்தப்பட்ட விடைத் தாள்களைப் பார்வையிட எனது அறைக்கு வருவார். திருத்தப்பட்ட விடைத்தாளிலுள்ள சுட்டிலக்கத்தைப் பார்த்தவுடன் அந்த மாணவன் மற்றைய வினாத்தாள்களை எவ்வாறு செய்துள்ளான் என்பதையும் கடந்த பரீட்சைகளில் அவனது அடைவுகள் என்ன என்பதையும் நினைவுகூர்வார். ஒரு நல்ல மாணவன் பரீட்சையில் குறைந்த புள்ளிகளைப் பெறும் போதும், ஒரு மீள் பரீட்சார்த்தி தோல்வி அடையும் போதும் அவரது முகத்தில் தோன்றும் வலி எனது மனதை விட்டகலாது.

**இளமைக் காலம்**

பேராசிரியர் மகேஸ்வரன் தனது இடைநிலைக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியில் பெற்றார். அங்கு அவர் சகலதுறைகளிலும் தலைசிறந்த ஒருவராக விளங்கினார் என்பதை அவரது சகமாணவர்கள் நினைவுகூருகின்றனர். அவரது துடுப்பாட்டமும் உதைபந்தாட்டமும் ரசிகர் கூட்டமொன்றை அவருக்கு ஏற்படுத்தியிருந்தன. மிக நுணுக்கமான சுழல் பந்து வீச்சாளராக அவர் திகழ்ந்தார். அவர் மைதானத்தில் இறங்கும் போதெல்லாம் உற்சாகக் கூக்குரலும் கைதட்டலும் மைதானத்தை நிறைக்கும்.

பாடசாலையிலிருந்து அவர் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டார். அங்கு இரசாயனச் சிறப்புப் பட்டக் கல்விக்குத் தெரிவாகி அதன் இறுதி வருடத்தை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பயின்றார். 1966 இல் உயர்தகைமையுடன் பட்டக் கல்வியைப் பூர்த்தி செய்து அங்கு குறுகிய காலம் விரிவுரையாளராகக் கடமையாற்றிய பின் 1968 இல் இங்கிலாந்தின் ஷெ (ஃ) பீல்ட் பல்கலைக்கழகத்திற்குப் பயணமானார். அங்கு முதுமாணி, கலாநிதிப் பட்டங்களைப் பெற்று நாடு திரும்பிப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிறிது காலம் பணியாற்றிப்பின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராக இணைந்து கொண்டார்.

(19 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir



# உன்னைச் சரணடைந்தேன்

**கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 84**

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



## சோதனைக்குள்ளாக்கிய 1995

### ஆபத்தில் உதவிய அப்பர் அண்ணை

எங்கள் கழகத்தின் இரசிகர் இவர். யாழ். கலட்டி அம்மன் ஆலயத்தில் தலைவராய் இருந்தவர். இவரது சொந்தப் பெயர் தர்மராஜா. அப்பர் அண்ணை என்ற பெயரில் தான் அனைவராலும் அறியப்பட்டிருந்தார். பெரும் ஆளுமையாளன். அவரது ஆலய கும்பாபிஷேகத்தையொட்டி, எனது இராமாயணச் சொற்பொழிவுக்கு ஒழுங்கு செய்தார். அச் சொற்பொழிவு குடாநாடு முழுவதும் பேசப்பட்டதுபற்றி, முன்னரே சொல்லியிருக்கிறேன். அந் நிகழ்ச்சிக்கு எவ்வளவோ செலவான போதும் அதைப்பற்றிக்கவலைப்படாது, அந்த எழுச்சியைத்தன் சொந்தச் செலவில் ஊக்கப்படுத்தினார். கழக முயற்சிகளில் இணைய விரும்பித் தானாக எம்மிடம் வந்து சேர்ந்து, எமக்குத் துணை புரிந்து வந்த மகாராணி புடைவைக் கடை உரிமையாளர், திரு.சோமசுந்தரம் கம்பன் விழாவில் தனக்கு முக்கியத்துவத்தை எதிர்பார்க்க, கழகம் அதை நிராகரித்தது. அதனால் அவர் கழகத்திற்கு எதிரியானார். கழக முயற்சிகளுக்குப் பொருட்துணை புரிந்த பல வர்த்தகர்கள் அவரால் தடுக்கப்பட்டனர். அப்போதும் நாம் பாதிக்கப்படவில்லை.

யாழ்ப்பாணம் எஸ்.வி.முருகேசு கடையில் மனேஜராய் இருந்ததியாகு, அந்நேரத்தில் தானாக முன் வந்து பலரதும் ஆதரவை எமக்குத் தேடித் தந்தார். பின்னர், அவரும் கழக முயற்சிகளுக்கு ஆதரவு தர நிபந்தனைகள் விதிக்கத் தொடங்கினார். அதனை நாம் மறுக்க, அவரும் வெளியேறினார். அப்போது எங்களோடு நின்றுதன் முழுச் செல்வாக்கையும் பயன் படுத்தி, எங்கள் கழக நிதி முயற்சிகளுக்கு கடைசி வரை துணையாய் தர்மராஜா இருந்தார். புலிகள் முதன் முதலில் பவுண் சேர்த்த பொழுது தானாகவே இருபத்தைந்து பவுணை, கொண்டு போய்க் கொடுத்த தேசப் பற்றாளன். பின்னாளில் இந்திய இராணுவம் இவரது ஆளுமையால் ஈர்க்கப்பட்டு, இவரை அடிக்கடி சந்திக்க, புலிகளால் துரோகியாய்க் கருதப்பட்டு சுடப்பட்டு இறந்தார். எம்மால் மறக்க முடியாத மனிதர்களுள் இவரும் ஒருவர்.

★ ★ ★


### பந்தலில் அடிபட்ட தியாகு

சென்ற ஆண்டு விழாவுக்கு ஆதரவு தந்து, இந்த ஆண்டு விழாவில் சற்று விலகி இருந்த தியாகு நாங்கள் தன்னைத் தேடி வருவோம் என எதிர்பார்த்து வராததால் ஒருநாள் இரவு, எங்களுக்கு புத்தி சொல்லும் எண்ணத்துடன் நல்லூர் வீதியால் வந்திருக்கிறார். அப்போது வீதியில் போடப் பட்டிருந்த எங்கள் விழாப் பந்தல் தடியில், இருட்டில் அடிபட்டு காயப் பட்டுப் போனார். அதனால், அவரே சற்றுப் பயந்து போனார் என்று நினைக்கிறேன். தலையால் இரத்தம் வழிய கோட்டத்திற்கு அவலமாக வந்த அவருக்கு முதலுதவிகள் செய்து அனுப்பி வைத்தோம். எதுவுமே பேசாமல் திரும்பிச் சென்று விட்டார்.

★ ★ ★

### யாருக்கு விருது வழங்குவது

நாங்கள் 'மகரயாழ் விருது' கொடுக்கத் தொடங்கியதன் பின்னர் தான், புலிகள் இயக்கத்தினர் 'மாமனிதர்' என்ற ஒரு விருதை வழங்கத் தொடங்கினர். பொருத்தமில்லாதவர்களுக்கும் அவ்விருது வழங்கப்பட்டதால் அவ்விருது அதிகம் மதிப்பைப் பெறவில்லை. கழகம் தக்கவர்களைத் தேர்ந்தெடுத்து விருதுகளை வழங்கியதால் அவ் விருது சமூகத்தால் மதிக்கப்பட்டது. புலிகள் முரண் பட்டு நிற்கும் இவ் வேளையில், இம்முறை யாருக்கு விருதை வழங்கலாம் என, குழம்பினோம். இவ் விருதை வைத்து புலிகளின் முரண்பாட்டையும் சற்றுத் தணிக்க நினைத்தோம். அப்போது டாக்டர் ஜெயகுலராஜா என்பவர் புலிகளோடு மிக நெருக்கமாய் இருந்தார்.



புலிகளால் நடத்தப்பட்டதாய்ச் சொல்லப்பட்ட மருத்துவக் கல்லூரிக்கு, அவரே பொறுப்பாய் இருந்ததாய் அக்காலத்தில் பேச்சு அடிபட்டது. அன்ரன் பாலசிங்கம் போன்றவர்கள் வந்து அடிக்கடி சந்தித்துச் செல்லும் மனிதர் அவர். சமூக அக்கறையாளர். எனவே சற்று ஆழமாய்த் திட்டமிட்டு இம்முறைக்கான மகர யாழ் விருதினை, டாக்டர் ஜெயகுலராஜா அவர்களுக்கே வழங்குவதாய் முடிவு செய்தோம். விருதை நாங்கள் அறிவித்ததும் புலிகளும் சற்றுக் குழம்பிப் போயினர். அவர்களின் ஆதரவாளரான டாக்டரின் விருதை அவர்களால் நிராகரிக்கவும் முடிய வில்லை. விருது அறிவிக்கப்பட்டதுமே பத்திரிகைகளில் அவரை வாழ்த்தி, பலரும் அறிக்கை விடத் தொடங்கினர். அவர் வருவதால் விழாவுக்கு எந்த இடையூறும் வராது என்ற நம்பிக்கையில் விழா வேலைகளில் உற்சாகமாய் இறங்கினோம்.

★ ★ ★

### மித்திரபேதம்

ஆரம்பத்தில் எமக்கு உதவிய மகாராணி புடைவைக்கடை உரிமையாளர், தமது விருப்புக்கள் அனைத்திற்கும் நாம் இடந்தராததால் பின்னாளில் எங்களோடு பகைகொண்ட, பொன்.சுந்தரலிங்கம் அவர்களோடு சேர்ந்து பல காரியங்களையும் செய்யத் தொடங்கினார். இவர்களது தூண்டுதல்களால், எங்களது முன் னாள் லைற் எஞ்சின்காரரும் விழாப் பந்தல் போட்டவரும் எங்களோடு பகைத்து பிரச்சினை தந்தனர். மேற் குறிப்பிட்டவர்களில் சிலரை திருப்திப் படுத்தி எங்களோடு பகைப்பிற்பதற்காக, அவர்களை பொன்.சுந்தரலிங்கம் தனது விழாக்களில் மங்கல விளக்கேற்றவும் தலைமையுரையாற்றவும் போட, அவர்கள் எங்கள் கழகம் அப்படிச்செய்யவில்லை என்று குறை சொன்னதாய் அறிந்தேன்.

அதனால் இவ்வாண்டு விழாவில் இவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து, எங்களுக்கு மறைமுகமான இடைஞ்சல்களைக் கொடுத்தனர். நாதஸ்வர வித்துவான் பத்மநாதனை எங்களோடு பகைப்பித்து இவ் விழாவில் அவரைக் கலந்து கொள்ளாமல் செய்த பொன்.சுந்தரலிங்கம் மற்றைய நாதஸ்வர வித்துவான்களையும் இவ் விழாவில் கலந்து கொள்ளக் கூடாது எனத் தடுத்தார். யார் காரணமாக அவருக்கு எங்கள் மேல் பகை பிறந்ததோ, அந்த காரணரான பஞ்சமூர்த்தி அவர்களே, அம் முயற்சியில் அவரோடு துணை நின்றது, எமக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. அவ் விருவரதும் கோரிக்கையை நிராகரித்து, அம்முறை அனைத்து நாதஸ்வர வித்துவான் களும் மழையையும் பொருட்படுத்தாமல் எமது விழாவில் கலந்து சிறப்பித்து எம்மை நெகிழச் செய்தனர்.

★ ★ ★

### பிரச்சினைகள் தொடர்ந்தன

விழா வேலைகளையெல்லாம் ஒருவாறு செய்து முடித்தோம். வழக்கமாக எங்களுக்குப் பந்தல் போடுபவர், கழகத்தின் மேல் பகை கொண்டவர்களின் தூண்டுதலால், முடிந்த ஆண்டில் பேசியதை விட அதிகமான தொகையைக் கேட்க, நாம் அவர் கோரிக்கையை மறுத்தோம். அவர் சுன்னாகத்திலிருந்த புலிகளின் காவல் துறையில் முறைப்பாடு வைத்தார். சூழ்நிலை எங்களுக்கு எதிராக இருந்ததால் பிரச்சினையை வளர்க்க விரும்பாமல் அவர் கேட்ட தொகை யைக் கஷ்டப்பட்டுக் கொடுத்து, அவரிட மிருந்து விடுபட்டோம்.

அதேபோல வழமையான லைட் எஞ்சின்காரரும், மற்றவர்களின் தூண்டுதலால் எங்களோடு வலிய முரண்பட்டு விலகியிருந்தார். இவை நடந்திருந்ததால் இம்முறை பந்தல் போடவும் மின்சாரம் போடவும் வேறாட்களைப் பிடித்திருந்தோம். எங்களின் மேல் அன்பு கொண்ட பட்டாசுமாமா என்கின்ற ஒலிபெருக்கிக்காரர் இவ் வேலைகளில் தன்னாலான உதவிகளை யெல்லாம் செய்தார். கிடுகு வாங்குவதில் பிரச்சினை, வெளை கட்டுவ தில் பிரச்சினை என, பிரச்சினைகள் வரிசையாய் வந்தன. ஒருவாறு அனைத் தையும் தாண்டி , விழா ஆயத்தங்களைச் செய்து முடித்தோம்.

★ ★ ★

### எதிர்பாராத இடையூறு

விழாவிற்கு முதல் நாள், திடீரென மேகம் இருட்டத் தொடங்கியது. மெலி தாய் மழைத் துளிகள் விழத் தொடங்கின. ஓலைப் பந்தல் மழையைத் தாங்காது என்பதால் என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பினோம். அன்றிரவு கழக இளைஞர்கள் எல்லோரும் கழகத்திலேயே தங்கியிருந்தனர். நடுச் சாமம் போல பேய் மழை பெய்யத் தொடங்கியது. ஒருவருக்கும் நித்திரையில்லை. விழாவை நிறுத்துவதா, நடத்துவதா என்று, கூடி ஆராய்ந்து கொண்டே பொழுதைக் கழித்தோம். விடியற்காலையில் ஓரளவு மழை நின்றது. பந்தல் முழுவதும் ஒரே வெள்ளம்.

எப்படியும் விழாவை நடத்துவதென முடிவு செய்தோம். கழக இளைஞர்கள் எல்லாம் பந்தலுக்குள் நின்ற நீரை சாக்குகளைப் போட்டு உறிஞ்சச்செய்து வெளியில் கொண்டு போய்ப் பிழிந்து பந்தலைக் காயச் செய்தார்கள். மணல் பரப்பி, பந்தலைப் புதிதாய் ஆக்கினார் கள். அது அசுர வேலை. இப்போது நினைத்தாலும் மெய் சிலிர்க்கிறது. பழையபடி விழாப்பந்தல் தயாரானது.

★ ★ ★

### இடையில் நின்ற விழா

மாலையில் வானம் இருண்டு எப்போதும் மழை வந்து விடலாம் என்ற நிலையில் விழாவினை ஆரம்பித்தோம். டாக்டர் ஜெயகுலராஜா கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர். அவருக்காக, கிறிஸ்தவர்கள் பலர் வந்திருந்தனர். வழமை போல பெரிய கூட்டம். வழமையை விட அதிகமாக நாதஸ்வர, தவில் வித்துவான்கள் வந்திருந்தனர். விழா சிறப்புற ஆரம்பமானது. மழை எந்த நேரமும் வந்து விடலாம் எனும் பயம் மனதினுள் இருக்க, விருது வழங்கும் வைபவத்தை மிகச் சிறப்பாக நடத்தினோம். மகரயாழ் விருது வழங்கும் வைபவமும் அறிஞர்களைக் கௌரவிக்கும் வைபவமும் மிகச் சிறப்பாக நடந்தேறின. பந்தல் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. வித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராஜா, பண்டிதர் வீரகத்தி, ஆத்ம ஜோதி முத்தையா, பண்டிதர் வைத்தீஸ்வரக் குருக்கள், எழுத்தாளர் சு.வே.,ஓவியர் மணியம் ஆகியோர், இவ்விழாவில் கௌரவிக்கப்பட்டனர். பன் மதத் தலைவர்கள், சிவத்தமிழ்ச் செல்வி, மாவை ஆதீனம் போன்ற, பலரும் ஆசி வழங்க ஜெயகுலராஜா விருது பெற்றார். அதன் பின்னர், நடன ஆசிரியை லீலா செல்வராஜா அவர்களுடைய மாணவர்களின் நாட்டிய நாடகம் நடக்கத் தொடங்கியது. ஆனால் அந்த நேரம் பார்த்து மழை கொட்டத் தொடங்க, அந்த நிகழ்ச்சியை அன்று நிறுத்த வேண்டியதாயிற்று, விருது வழங்கல் வைபவத்தோடு அன்றைய விழாவை இடைநிறுத்தினோம்.

★ ★ ★

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் சிங்களவர்களின் அதிகரிப்பு தமிழர்கள் எதிர்காலத்திற்கு ஆபத்து!



## டக்ளஸ் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, பெப். 02

சிங்கள மக்களை வடக்கில் குடியேற்றுவது தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு மிகப் பெரிய ஆபத்து என ஈழமக்கள் ஜன நாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

மகாவலி கங்கைத் திட்டம் வடக்கிற்கு வந்ததால் வடக் கில் சிங்களவர்களின் சனத் தொகை அதிகரித்துள்ளது.

வடக்கிற்கு இன்னும் மகா வலி கங்கை வரவில்லை எனினும் முல்லைத்தீவு மாவட் டத்திற்குரிய சுமார் 2 ஆயிரத்து 600 ஏக்கர் காணிகள் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுள் ளன.

இந்தக் காணிகளைப் பெற் றுள்ள சிங்கள மக்களுக்கும் வடக்கிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. தெற்கில் இருந்து அழைத்து வந்து இங்கு குடி யேற்றியுள்ளனர்.

மணலாறு (வெலி ஓயா) பிரதேசம் முற்றாக சிங்கள மக்கள் வாழும் பிரதேசமாக மாற்றப்பட்டுள்ளது.

டொலர் பார்ம் மற்றும் கென்ட் பார்ம் ஆகிய தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளும் சிங்கள மக் களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை, மல்வத்து ஓயா அபிவிருத்தித் திட்டத் தின் கீழ் செட்டிக்குளம் மற்றும் மடு உட்பட சில பிரதேசங் களில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் பறி போகும் ஆபத்து ஏற்பட்டுள் ளது.

இந்த நிலைமையை எதிர் கொள்ள வடக்கில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன் றாக இணைந்து செயற்பட வேண்டும் எனவும் டக்ளஸ் குறிப்பிட்டுள்ளார். (க)

# இந்திய சுற்றுலாப் பயணிகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை!



கொழும்பு, பெப். 02

இந்தியாவில் இருந்து இலங் கைக்கு வரும் சுற்றுலாப் பயணி களின் எண்ணிக் கையை அதிக ரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதன்படி, இந்த ஆண்டில் 4.4 லட்சம் இந்திய சுற்றுலாப் பய ணிகளை இலக்கு வைத்து செயற் படுவதாக சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு 3,84,628 இந் திய சுற்றுலாப் பயணிகள் இலங் கைக்கு வருகைத் தந்துள்ளனர்.

இந்நிலையில், இந்த ஆண்டு 4 லட்சத்து 40 ஆயிரம் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், இந்தி யாவில் இருந்து சுற்றுலாப் பயணி களை ஈர்ப்பதற்கு இலக்கு நிர்ண யிக்கப்பட்டுள்ளது என சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. (க)

# லபுக்கலை பிரதேசத்தில் விபத்து; சிறுவர் உட்பட 9 பேர் படுகாயம்!





கொழும்பு, பெப். 02

நுவரெலியா - லபுக்கலை பிரதே சத்தில் வேகமாக வந்த பஸ் வேக கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண் டதில் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இதில், 4 முதியோர்கள், 4 பாட சாலை மாணவர்கள் உட்பட 4 வயது சிறுவன் ஒருவனும் காயமடைந்து நுவரெலியா மாவட்ட ஆதார வைத் தியசாலையில் அனு மதிக்கப்பட் டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை நுவ ரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இணையம் தொடர்பில் 260 முறைப்பாடுகள்!

கொழும்பு, பெப். 02

இந்த ஆண்டின் முதலாவது மாதத்திற்குள் இணையத்துடன் தொடர்புடைய 260 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என இலங்கை கணினி அவசரபதில் அமைப்பு கூறியுள்ளது.



அந்த முறைப்பாடு களில் அதிகமானவை சமூக வலைத் தளங்க ளுடன் சம்பந்தப்பட் டவை என்று அந்த அமைப்பின் பாது காப்புப் பொறியியலாளர் ரொஷான் சந்திரகுப்த கூறியுள்ளார்.

சமூக வலைத்தளங் களில் வேறு நபர்களின் புகைப்படங்கள் பயன்படுத்தப்பட்டுள் ளமை தொடர்பாக அதிக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்றும் அவர் கூறினார். (க)

# பயிர்ச் செய்கை காணிகளை குடியிருப்பாக மாற்றக்கூடாது!

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 02

பயிர்ச் செய்கை மேற்கொள்ளக் கூடிய காணிகளை மக்கள் குடியி ருப்புக்களாக மாற்றக் கூடாது என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள் ளார்.

இன்று வளர்ச்சி கண்டுள்ள நாடுகளில் நகரங்கள் சார்ந்ததா கவே குடியிருப்புக்கள் நிர்மாணிக் கப்படுகின்றன. பயிர்ச் செய்கை உள்ளிட்ட தேவைகளுக்காக காணி கள் விட்டு வைக்கப்படு கின்றன என்று அமைச்சர் குருநாகலில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போது குறிப்பிட்டுள் ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

வீடுகளை அமைப்பதில் தொலை நோக்கு அவசியம். வீடுகளுக்கான வசதிகளை முறையாகத் திட்ட மிட்டு அடுக்குமாடிக் குடியிருப் புக்களை அமைப்பதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண லாம் என்றும் அமைச்சர் தெரிவித் துள்ளார்.

# 7000 தொண்டர்கள் கண்காணிப்பு பணிகளில்

கொழும்பு, பெப். 02

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்காக 7000 தொண்டர்கள் தயார் நிலையில் இருக்கின்றனர் என பஃவ்ரல் அமைப்புத் தெரிவித் துள்ளது.

இதுதொடர்பில் பஃவ்ரல் அமைப்பின் தேசிய ஒருங்கி ணைப்பாளர் சுஜீவ ஜயலத் தெரிவித்தவை வருமாறு:-

இந்தத் தொண்டர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதில் 1000 பேர் தபால் மூல வாக்களிப்புப் பணிகளின் கண்காணிப்புப் பணிகளிலும், 4000 இற்கும் மேற்பட்டடோர் வாக்களிப்பு நடைபெறும் இடங்களுக்கும் அனுப்பப்பட வுள்ளனர்.

1500 பேர் 350 நடமாடும் வாகனங்கள் மூலம் நடமாடும் கண்காணிப்புப் பணியிலும், ஈடுபடவுள்ளனர்.

கொழும்பு, மருதானையில் அமைந்துள்ள சமூக நல கேட் போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (க)

# வெள்ளவத்தையில் ஆணின் சடலம் மீட்பு!



கொழும்பு, பெப். 02

வெள்ளவத்தைப் பகுதியில் மர்மமான முறையில் இறந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளவத்தை ரயில் நிலை யத்திற்கு அருகிலுள்ள கடற்கரையிலிருந்தே இந்த இளைஞரின் சடலம் மீட்கப் பட்டுள்ளது.

சுமார் 25 முதல் 35 வயது மதிக்கத்தக்க ஆணொருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. கொலையா அல்லது தற்கொலையா என்ற கோணத்தில் விசா ரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என வெள்ளவத்தைப் பொலிஸார் தெரி வித்தனர்.

இந்தச் சடலம் பிரேத பரிசோதனைக் காக களுபோவில வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்றும் சடலத்தை அடையாளங்காண பொது மக்களை உதவுமாறும் வெள்ளவத்தைப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக**

27) பின்வரும் வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.
   1. பறவைகள் இரை தேடிப் பறந்தது   2. பறவைகள் இரை தேடிப் பறந்தனர்
   3. பறவைகள் இரை தேடிப் பறந்தன

28) "ஆகாய விமானம்" என்னும் சொல்லில் உள்ள எழுத்துக்கள் மூலம் ஆக்கக் கூடிய ஒரு சொல்
   1. காகம்   2. மாயாவி   3. காவியம்

29) பொருத்தமற்ற சோடிச் சொற்களைத் தெரிவு செய்க
   1. பூட்டு - திறப்பு   2. ஊசி - நூல்   3. பட்டம் - வீடு

30) எழுத்துக் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய எழுத்துக்கள்
   ABC , BCD , CDE , ............. , EFG
   1. EHI   2. DEG   3. DEF

31) 10 தொடக்கம் 20 வரை எழுதும் போது 1 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை
   1. 10   2. 11   3. 12

32) 100 தொடக்கம் 110 வரை எழுதும் போது 0 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை
   1. 9   2. 10   3. 12

33) பாடசாலை ஒன்றில் அதிகமாக இருக்க வேண்டியவர்கள்
   1. பெற்றோர்   2. ஆசிரியர்கள்   3. மாணவர்கள்

34) பேருந்து வண்டியில் அதிகமாகப் பிரயாணம் செய்பவர்கள்
   1. மக்கள்   2. மாணவர்கள்   3. நோயாளர்கள்

35) குமரன் எந்த வேலையையும் சரியாக விரைவில் செய்து முடித்துவிடுவான்.
   1. குமரன் அவசர புத்தியுள்ளவன்
   2. குமரன் சுறுசுறுப்பானவன்
   3. குமரன் சோம்பேறி

36) சீலன் ஆபத்து வேளையில் கைகொடுப்பான்.
   1. சீலன் சந்தர்ப்பவாதி
   2. சீலன் ஒரு புகழ்விரும்பி
   3. சீலன் நல்ல நண்பன்

37) நான்கு பிள்ளைகளின் பிறந்த தினங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   கமலி 2007.11.26   தயானி 2007.12.03
   ரமணி 2007.12.24   விமலா 2007.11.05

   இதன்படி பின்வரும் கூற்றுகளில் பிழையானது எது?
   1. கமலி தயானியிலும் மூத்தவள்
   2. விமலா ரமணியிலும் மூத்தவள்
   3. கமலி விமலாவிலும் மூத்தவள்

38) மண்டபம் ஒன்றில் போடப்பட்டிருந்த கதிரை நிரை ஒன்றின் வலது பக்கத்திலிருந்து 16 ஆவது கதிரையில் மாலா அமர்ந்திருந்தாள். இடது பக்கமாக இருந்து பார்க்கும் போது மாலா அமர்ந்திருக்கும் கதிரை ஒன்பதாவது இடத்தில் இருந்தது. அந்த நிரையில் இருந்த கதிரைகள் எத்தனை?
   1. 19   2. 24   3. 25

**நாதனும், மோகனும் , லலிதாவின் பிள்ளைகள் ஆவார். குமுதனுக்கு மோகன் சிற்றப்பா ஆவார். இதன்படி**

39) நாதனுக்கும் , குமுதனுக்கும் இடையே உள்ள உறவு முறை என்ன?
   1. பாட்டன் - பேரன்   2. பெரியப்பா - மகன்   3. அப்பா - மகன்

40) குமுதனுக்கு லலிதா என்ன முறையாவார்?
   1. மாமி   2. பாட்டி   3. அம்மா






# கல்விக் கதிர் வெளியீடு
## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்


வினாத்தாள் **01**

தரம்-5   பகுதி I   நேரம்- 45 நிமிடம்

உருக்கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.


1)


1.   2.   3.


2)


1.   2.   3.

வேறுபட்ட உருவினைத் தெரிவு செய்க.


3)


1.   2.   3.   4.


4)


1.   2.   3.   4.

முதலில் தரப்பட்ட உருவுடன் நெருங்கிய உருவைத் தெரிவு செய்க

5)


1.   2.   3.

6)


1.   2.   3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**சோடிச் சொற்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.**

7) அறிவு - பொழுதுபோக்கு



1. 2. 3.

8) ஒளி - வெப்பம்



1. 2. 3.

**தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு விடை எழுதுக.**

சிறகடிக்கும் பறவைகளின் கீத ஒலி கேட்கும். மலரும் மலர்களோ எங்கும் மணம் பரப்பும்.
வீசும் தென்றல் உடலுக்கு குளிர்ச்சி தரும். அதிகாலைப் பொழுதோ இன்பம் ஊட்டும்.

9) கவிதையில் குறிப்பிடப்படுவது, காலையில் வீசும் காற்று
1. பறவைகளின் கீத ஒலி கேட்கச் செய்யும் என்பதை
2. உடலுக்கு குளிர்ச்சி தரும் என்பதை
3. மலர்கள் மணம் பரப்பும் என்பதை

10) காலையில் நடைபெறும் ஆனால் கவிதையில் குறிப்பிடப்படாத ஒரு விடயம்
1. குளிர்ச்சியான தென்றல் காற்று வீசுதல்
2. நறுமணமுள்ள மலர்கள் மலருதல்
3. ஒளி மெதுவாக பரவுதல்

**வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

11) வெற்றியினால் .................. அடைந்த இரசிகர்கள் ...................
1. மகிழ்ச்சி - கைதட்டினர் 2. களைப்பு -வாழ்த்தினர் 3. இன்பம் - கண்ணீர் விட்டனர்


**உவமானத்திற்குப் பொருத்தமான சந்தர்ப்பத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.**

12) 'எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றினாற் போல'
1. சிக்கலைத் தீர்க்க உதவுதல் 2. மேலும் கோபமூட்டச் செய்தல்
3. வறியவர்களுக்குப் பணஉதவி செய்தல்

13) 'ஆகாயத்தில் கோட்டை கட்டுவது போல'
1. செய்ய முடியாத செயலைச் செய்ய முயலுதல் 2. பெரிய வேலையைச் செய்யத் தொடங்குதல்
3. மிக ஊக்கத்துடனும் தைரியத்துடனும் செயற்படுதல்

**தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்பச் சரியான விடையைத் தெரிவு செய்க.**


14) பூரணச் சந்திரன் உதித்து பின்வரும் இரு வாரங்களினுள் 4 நாட்களில் இரவு வானில் சந்திரன் தோன்றிய விதங்கள் பின்வரும் உருக்களில் காணப்படுகின்றன.



A B C D

அந்நான்கு நாட்களும் இடம்பெறும் ஒழுங்கு வரிசை
1. D , A , B , C 2. C , B , D , A 3. D , B , C , A

15) உருக் கோலத்தில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க



1. 2. 3.



16) இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



1. 8 2. 10 3. 12

17) பிழையான கோவையைத் தெரிவு செய்க.
1. 6 X 6 - 6 = 30 2. 5 X 5 + 5 = 30 3. 33 - 33 - 3 = 30


18) சரியான கோவைத் தெரிவு செய்க.
1. 888+88+88+8+8 = 1000 2. 888+88+8+8+8 = 1000 3. 888+88+88+8+8+8 = 100(

**ஒரு கவிதையின் நான்கு வரிகள் மாற்றி எழுதப்பட்டுள்ள விதம் கீழே காணப்படுகின்றது. அவற்றின் சரியான ஒழுங்கு முறை யாது?**

19) (A) வீட்டில் என்னிடம் இருக்கிறது
(B) நித்தம் நித்தம் அதன் முன்னால்
(C) மெத்தப் பெரிய கண்ணாடி 1. C, B, A, D 2. C, A, B, D 3. D, C, A, B
(D) நின்றே அழகு பார்த்திடுவேன்


**தரப்பட்டுள்ள உருக்களில் ஒன்று மற்றயவைகளில் இருந்து வேறுபட்டது. அதனைத் தெரிவு செய்க.**

20)



1. 2. 3. 4.

21)



1. 2. 3. 4.

**கீழுள்ள வினாக்களுக்கான பொருத்தமான விடையை தெரிவு செய்க**

22) பேருந்துகளில் மணியினை பொருத்தியிருப்பதற்கான காரணம்
1. ஏனைய வாகனங்களிலும் காணப்படுவதால் 2. பேருந்து அழகாக காட்சியளிப்பதற்கு
3. பேருந்தை நிறுத்தவும் செலுத்தவும் சமிக்ஞை வழங்குவதற்கும்

23) "தொப்பிகளையும் பாதணிகளையும் கழற்றிவிட்டு உள்ளே செல்க." என்னும் அறிவித்தலின் கருத்தாவது.
1. தொப்பி, பாதணிகளை கொள்வனவு செய்யக் கூடாது என்பதாகும்.
2. தொப்பி, பாதணிகள் போடுவது பொருத்தமானதல்ல என்பதாகும்.
3. தொப்பி, பாதணிகள் இலவசமாக வழங்கப்படும் என்பதாகும்.

24) 2017 ம் ஆண்டு ஜனவரி 01ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தினமாகும். அதன்படி ஜனவரி மாதத்திலுள்ள வெள்ளிக்கிழமை சனிக்கிழமைகளின் எண்ணிக்கை முறையே
1. 4 உம் 4 ஆகும் 2. 4 உம் 5 ஆகும் 3. 5 உம் 5 ஆகும்

25) விற்பனை நிலையமொன்றிற்கு முதல் நாள் 2539 kg நெல்லும் இரண்டாம் நாள் 1788 kg நெல்லும் கொள்வனவு செய்தனரெனின் இரு தினங்களிலும் கொள்வனவு செய்த நெல்லின் அளவு
1. 4327 kg 2. 4327 g 3. 4 kg 327 g

26) ஹரினி சரணியை விட உயரமானவள். ஆனால் நிறை குறைவானவள். காவியா ஹரினியை விட உயரமானவள். ஆனால் நிறையில் ஹரினியை விட குறைவானவள். மூவரிலும் அதிக நிறையுடையவர் யார்?
1. ஹரினி 2. காவியா 3. சரணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானில் முதியோர் இல்லத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 11 பேர் சாவு



ரோக்கியோ,பெப்.02

ஜப்பானில் முதியோர் பாதுகாப்பு இல்லத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 11 பேர் பரிதாபமாகக் கருகி உயிரிழந்தனர்.

ஜப்பானின் சப்போரோ பகுதியில் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிக் கஷ்டப்படும் முதியோருக்கு உதவும் வகையில் உள்ளூர் அமைப்புச் சார்பில் குறைந்த கட்டணத்தில் தங்குமிடம் செயற்படுகின்றது. மூன்று தளங்கள் கொண்ட இந்தக் கட்டடத்தில் 16 முதியோர்கள் தங்கியிருந்தனர். அவர்களுக்குத் தேவையான வேலை வாய்ப்புகளையும் இந்த அமைப்பு ஏற்பாடு செய்து வருகிறது.

இந்த நிலையில், இந்த இல்லத்தில் நேற்றுமுன்தினம் இரவு திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டது. உடனே அங்கிருந்த முதியோர் அனைவரும் அவசரமாக வெளியேறினர். இருப்பினும் தீ மளமளவெனப் பரவியதால் சிலர் உள்ளே சிக்கிக் கொண்டனர். இதுபற்றித் தகவல் அறிந்த தீயணைப்புப் படையினர் விரைந்து தீயை அணைத்தனர்.


இந்தத் தீ விபத்தில் இல்லம் முழுவதும் எரிந்து சாம்பலானது. 8 ஆண்கள், 3 பெண்கள் என மொத்தம் 11 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். தீ விபத்துத் தொடர்பாகப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ப)

# ஓநாய்க்கு ட்ரம்பின் பெயரை சூட்டிய கொசவா விவசாயி

கொசவா,பெப்.02

தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான கொசவாவைச் சேர்ந்த விவசாயி தனது வளர்ப்பு ஓநாய்க்கு ட்ரம்பின் பெயரைச் சூட்டிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான கொசவாவைச் சேர்ந்த ரெக்ஸ்கா என்ற விவசாயி நான்கு ஓநாய்களைச் செல்லப் பிரா



ணிகளாக வளர்த்து வருகின்றார். வனப்பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட இந்த ஓநாய்களில் ஒன்றிற்கு அமெரிக்க அதிபர் ட்ரம்பின் பெயரைச் சூட்டியுள்ளார். இது அனைவரிடமும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாகப் பேசிய ரெக்ஸ்கா, அமெரிக்க பிரதமர் ட்ரம்ப் அதிக ஆற்றல் கொண்டவர். மிகவும் தைரியமானவர். அவரின் அனைத்து குணங்களும் பிடித்ததால்தான் எனது ஓநாய்க்கு ட்ரம்ப்பின் பெயரைச் சூட்டினேன். எனது ஓநாயும் மிகவும் சுறுசுறுப்பாகச் செயற்படும். அதனுடைய செயல்கள் ட்ரம்பை ஒத்திருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

# ஈரான் ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் போராட்டம்

## ட்ரம்ப் ஆதரவு

ஈரான் நாட்டில் ஆட்சியாளர்களின் ஊழலை எதிர்த்தும், அடிப்படை உரிமைகளைக் கேட்டும் போராடும் மக்களுக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஆதரவு தெரிவித்துள்ளார்.

ஈரான் நாட்டு மக்கள் தங்களுக்குத் தேவையான அடிப்படை உரிமைகளைக் கேட்டும், ஊழ லுக்கு எதிராக போராடியும் வரு கின்றனர். அரசுக்கு எதிராக நாடு முழுவதிலும் பல்வேறு நகரங்களில் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

அவ்வகையில், எட்டாவது ஆண்டாக கடந்த டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி தொடங்கிய மக்கள் போராட்டம் மிகப்பெரிய அளவில் எழுச்சி பெற்றுள்ளது. போராட்டக்காரர்களை ஒடுக்கப் பெருமளவில் அரசுப் படைகள் குவிக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் மீதான அரசின் அடுக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித் துள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மக்களின் போராட்டத்தை ஆதரிக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

# ஸ்பெயின் நாட்டின் புதிய இளவரசியாக ஆறாம் பிலிப் மன்னரின் 12 வயது மகள்

மட்ரிட்,பெப்.02

ஸ்பெயின் நாட்டின் இளவரசியாக மன்னர் ஆறாம் பிலிப்பின் 12 வயது மகள் லியோனார் அறிவிக்கப்பட்டுள்ளார். இவர்தான் ஸ்பெயினின் வருங்கால அரசியாவார்.

ஸ்பெயின் நாட்டின் மன்னராக ஆறாம் பிலிப் உள்ளார். இவரது 50ஆவது பிறந்த நாள் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. அதையடுத்து மட்ரிட் நகரில் மன்னர் குடும்பத்தின் விருது வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. மட்ரிட் நகரில் உள்ள ராயல் மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மன்னர் ஆறாம் பிலிப் தனது மகள் லியோனாரை இளவரசியாக அறிவித்துள்ளார்.



இளவரசியாக அறிவிக்கப்படுவது அரச குடும்பத்தில் மிகப்பெரிய கௌரவமாகும். இளவரசியாக அறிவிக்கப்பட்ட 12 வயதுச் சிறுமியான லியோனார் வருங்காலத்தில் ஸ்பெயின் நாட்டையே ஆட்சி செய்யும் இராணியாகச் செயற்படுவார்.

இனி சிறுமி லியோனார் ஸ்பெயின் சிம்மாசனத்திற்குட்பட்டவர் ஆவார். இளவரசியாக அறிவிக்கப்பட்டதன் மூலம் லியோனார் ராணி ஆவதற்கான முதல் படியை எட்டியுள்ளார்.

சமீபத்தில் வரி ஏய்ப்புக் குற்றச்சாட்டில் சிக்கிய மன்னர் ஆறாம் பிலிப்பின் சகோதரியான இளவரசி கிறிஸ்டினாவின் இளவரசிப் பட்டம் பறிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# எரித்திரியாவில் இரு திருமணங்கள் செய்யாவிட்டால் சிறைத் தண்டனை

## புதிய சட்டம் அமுல்

அஸ்மாரா,பெப்.02

வடகிழக்கு ஆபிரிக்க நாடான எரித்திரியாவில் ஆண்கள் இரண்டாவது திருமணம் செய்யாவிட்டால் சிறைத் தண்டனை விதிக்கும் புதிய சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியா உட்படப் பல நாடுகளில் இரண்டாவது திருமணம் செய்தால் குற்றம் என்ற நிலையில் எரித்திரியா என்ற நாட்டில் ஆண்கள் இரண்டாவது திருமணம் செய்யாவிட்டால் சிறைத்தண்டனை என்ற புதிய சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

எரித்திரியா ஒரு வடகிழக்கு ஆப்பிரிக்க நாடாகும். இது செங்கடலை ஒட்டி அமைந்துள்ளது. அந்த நாட்டில் அடிக்கடி போர்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் போர்களில் ஆண்கள் பலர் மடிந்து வருகின்றனர். எனவே அந்நாட்டில் ஆண்களின் வீதத்தை விட பெண்களின் வீதம் அதிகரித்து வருகின்றது

இதனைச் சரிக்கட்ட அந்த நாட்டில் ஒரு புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது, அதன்படி அந்நாட்டைச் சேர்ந்த ஆண்கள் இரண்டாவது திருமணம் செய்ய வேண்டும். இரண்டு திருமணம் செய்ய ஆண்கள் மறுத்தாலோ, கணவர் இரண்டாவது திருமணம் செய்ய முதல் மனைவி மறுத்தாலோ அவர்களுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் ஓர் ஆண் இரண்டு திருமணங்களுக்கு மேல் திருமணம் செய்தாலும் அந்நாட்டில் குற்றமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யா, சீனாவுக்கு இணையாக அமெரிக்காவும் அணு ஆயுத பலத்தை அதிகரிக்க வேண்டும்



ட்ரம்ப்

தீவிரவாதக் குழுக்களின் சவால்களைச் சந்திக்கவும், சீனா, ரஷ்யாவின் அச்சுறுத்தலை எதிர் கொள்ளவும், அவர்களுக்கு இணையாக நமது அணு ஆயுதபலத்தை அதிகரிக்க வேண்டும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

இந்த ஆண்டின் அமெரிக்க நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் நேற்று உரையாற்றினார்.

நாட்டின் பல்வேறு துறைகளைச் சீரமைப்பது தொடர்பான தனது விருப்பத்தை வெளிப்படுத்திய ட்ரம்ப் உலகம் முழுவதும் நேர்மையற்ற ஆட்சிகளையும், நமது நாட்டின் பொருளாதாரம் உள்ளிட்ட மதிப்பீடுகளைச் சீர்குலைக்க சவால்விடும் சீனா, ரஷ்யா போன்ற எதிரிநாடுகளையும் நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்தச் சவால்களை முறியடிப்பதற்காக, ஒப்புயர்வில்லாத வல்லமையை நாம் பெற வேண்டியுள்ளது. இந்த ஆபத்துகளை முறியடிக்க வேண்டுமானால் பலவீனமான அணுகுமுறை நிச்சயமாக நம்மை பிரச்சினைக்குள் சிக்க வைத்துவிடும். ஒப்புயர்வில்லாத ஆயுத வல்லமை மட்டும்தான் நமது தற்காப்புக்கான நிச்சயமான நிவாரணமாக அமையும்.

நமது தற்காப்புக்காக அணு ஆயுதத் தயாரிப்பை நாம் நவீனப்படுத்தி மறுகட்டமைப்பு செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

### குளிர்கால ஒலிம்பிக்:

# வடகொரியா பிரமாண்ட இராணுவ அணிவகுப்பு.



குளிர்கால ஒலிம்பிக் போட்டியையொட்டி, வருகின்ற 8ஆம் திகதி வடகொரியா பிரமாண்ட இராணுவ அணிவகுப்பு ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து வருகின்றது.

தென்கொரியாவில் உள்ள பியாங்சாங் நகரில் குளிர்கால ஒலிம்பிக் போட்டி வரும் 9ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி முடிவடையவுள்ளது. இந்தப் போட்டியில் அண்டை நாடான வடகொரியா பங்கேற்கின்றது. இது அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இந்தக் குளிர்கால ஒலிம்பிக் போட்டியையொட்டி, 8ஆம் திகதி வடகொரியா பிரமாண்ட இராணுவ அணிவகுப்பு ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து வருகின்றது என சி.என்.என். செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது. இந்த இராணுவ அணிவகுப்பின்போது நூற்றுக் கணக்கான ஏவுகணைகள், ரொக்கெட்டுகள் இடம் பெறவுள்ளன. இது தனது படை பலத்தைக் காட்டி அமெரிக்காவை அச்சுறுத்துவதற்கு வடகொரியா மேற்கொள்ளப்போகிற முயற்சி எனத் தகவல்கள் கூறுகின்றன.

கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்துசென்று தாக்குகிற வல்லமை மிக்க ஹவாசாங் -15 ரக ஏவுகணைகள் பல இராணுவ அணிவகுப்பில் இடம்பெறவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஜனியின் சின்னத்தில் மீண்டும் மாற்றங்கள்



தாமரையைத் தொடர்ந்து நடிகர் ரஜனிகாந்த் வெளியிட்ட பாபா சின்னத்தில் பாம்பு உருவமும் நீக்கப்பட்டுள்ளது.

நடிகர் ரஜனிகாந்த் அரசியல் கட்சி தொடங்குவதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார். ரஜனி ரசிகர் மன்றம் ரஜனி மக்கள் மன்றமாக மாற்றப்பட்டுள்ளது. இதில் உறுப்பினர்கள் சேர்க்கை தீவிரமாக நடந்து வருகின்றது.

இந்த நிலையில் ரஜனி தனது கட்சி பற்றி அறிவிக்கும்போது தான் நடத்த இருப்பது ஆன்மிக அரசியல் என்று கூறினார். இது பெரிய விமர்சனத்துக்குள்ளானது. ரஜனி வெளியிட்ட பாபா சின்னத்தில் தாமரை, பாம்பு ஆகியவற்றுடன் பாபா முத்திரை இடம் பெற்றிருந்தது.

தாமரை பா.ஜனதா சின்னம். எனவே முதலில் பாபா சின்னத்தில் இருந்த தாமரை அகற்றப்பட்டது. பின்னர் பாம்பு உருவத்துடன் இருந்த பாபா முத்திரை கொண்ட சின்னம் பயன்படுத்தப்பட்டது.

இப்போது ரஜனியின் மக்கள் மன்றம் வெளியிட்ட அறிவிப்பில் பாபா சின்னத்தில் இருந்த பாம்பு உருவமும் நீக்கப்பட்டு விட்டது. இப்போது பாபா முத்திரை கொண்டகை மட்டுமே இடம் பெற்றுள்ளது.

அத்துடன் உண்மை, உழைப்பு, உயர்வு என்ற வாசகமும் இடம் பெற்றுள்ளது. ஆன்மிகச் சர்ச்சை காரணமாகவே பாபா சின்னத்தில் இருந்த பாம்பு உருவம் நீக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

# ராஜஸ்தான் இடைத் தேர்தல்: காங்கிரஸ் அபார வெற்றி

## அதிர்ச்சியில் பா.ஜ.க



ஜெய்ப்பூர்,பெப்.02

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள அஜ்மீர், அல்வார் நாடாளுமன்றத் தொகுதி மற்றும் மண்டல்கர் சட்டசபை இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர்கள் அபார வெற்றி பெற்றுள்ளனர்.

ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீர் மற்றும் அல்வார் நாடாளுமன்றத் தொகுதிகள், மண்டல்கர் சட்டமன்றத் தொகுதி, மேற்கு வங்காளத்தில் உள்ள உலுபெரியா நாடாளுமன்றத் தொகுதி, நவுபாரா சட்டமன்றத் தொகுதிகளுக்கு கடந்த 29ஆம் திகதி இடைத்தேர்தல் நடந்தது.

இதில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன அஜ்மீர் மற்றும் அல்வார் நாடாளுமன்றத் தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட ரகு ர்மா மற்றும் கரண் சிங் யாதவ் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றனர்.

மண்டல்கர் சட்டமன்றத் தொகுதியில் பா.ஜ.க வேட்பாளர் முன்னிலை பெற்றிருந்த நிலையில், இறுதிச்சுற்று வாக்கு எண்ணிக்கையில் காங்கிரஸ் வேட்பாளர் விவேக் தாகத் 12ஆயிரத்து 976 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

இதேபோல், மேற்கு வங்காளத்தின் உலுபெரியா நாடாளுமன்றத் தொகுதி, நவுபாரா சட்டமன்றத் தொகுதிகளில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர்.

இடைத்தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட 5 இடங்களிலும் பா.ஜ.க தோல்வியைச் சந்தித்துள்ளது. நேற்று மத்திய வரவுசெலவுத் திட்டம் தாக்கல் செய்துள்ள நிலையில் இந்தத் தேர்தல் முடிவுகள் அக்கட்சிக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது.

# இந்திய வெளியுறவுக் கொள்கை வலுவானதாக மாறியிருக்கிறது




பீஜிங்,பெப்.02

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய பா.ஜ.க. ஆட்சியில், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை வலுவானதாக மாறியுள்ளது என சீன அரசின் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, சீன வெளியுறவுத் துறையின்கீழ் செயற்படும் சர்வதேச ஆய்வுகளுக்கான சீன நிறுவனம் சார்பில் வெளியான ஆய்வுக் கட்டுரையில், அதன் துணைத் தலைவர் ரோங் யிங் எழுதியிருப்பவை வருமாறு –

கடந்த 3 ஆண்டுகளில், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை வலுவானதாகவும் துடிப்பானதாகவும் மாறியிருக்கிறது. உலக அளவில் சிறந்த சக்தியாக இந்தியாவை எழுச்சிபெறச் செய்வதற்காகத் தனித்துவமான வியூகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சவாலான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இந்தியாவின் திறன் அதிகரித்துள்ளது.


அமெரிக்கா, ஜப்பானுடன் இந்தியாவின் உறவுகள் மேலும் நெருக்கமடைந்துள்ளன. பரஸ்பரம் பயனளிக்கும் வகையில், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை மாறியுள்ளது.

பிரதமர் மோடி, தனது பதவியேற்பு விழாவில் பங்கேற்க அனைத்து அண்டை நாடுகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்தார். பிரதமராகப் பதவியேற்ற பின், முதல் வெளிநாட்டுப் பயணமாக தெற்காசியாவிலேயே மிகச் சிறிய நாடான பூட்டானுக்குச் சென்றார். அவரது அரசின் வெளியுறவுகொள்கைகள் அனைத்தும், அண்டை நாடுகளுடான உறவுகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிப்பதாகவும் தெற்காசியப் பிராந்தியத்தில் தலைமை நாடாக இந்தியாவை முன்னிறுத்தும் வகையிலும் உள்ளன.

அண்டை நாடுகளுக்குப் பெரிய அளவில் உதவுவதன் மூலம் அந்த நாடுகளைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மோடி அரசு தொடர்ந்து செயற்படுகிறது. இதனால், இந்திய உதவியுடன் அண்டை நாடுகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றது.

இந்தியப் பிரதமராக மோடி பொறுப்பேற்றதில் இருந்து, இந்திய – சீன உறவுகள் சீரான அளவில் மேம்பட்டு வருகின்றன. வரும் காலங்களிலும் இந்த நிலை தொடருவதே இரு நாடுகளுக்கும் பயனளிக்கும் என்று அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேகமாக வளர்ந்துவரும் நாடாக இந்தியாவை மாற்றி வருகிறோம்




புதுடில்லி ,பெப்.02

உலகில் வேகமாக வளர்ந்து வரக் கூடிய நாடுகளில் ஒன்றாக இந்தியாவை மாற்றியுள்ளோம் என இந்த ஆண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்கையில் நிதியமைச்சர் அருண் ஜெட்லீ தெரிவித்துள்ளார். அடுத்த ஆண்டு மக்களவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், மோடி தலைமையிலான அரசு தாக்கல் செய்யும் இறுதி வரவுசெலவுத் திட்டம் இதுவாகும்.

மேலும், சரக்கு மற்றும் சேவை வரி அமுல்படுத்தபட்ட பின்னர் தாக்கல் செய்யப்படும் முதல் வரவுசெலவுத் திட்டம் என்பதால் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்ட வரவுசெலவுத் திட்டம் தொடர்பாக மக்கள் மத்தியில் அதிக அளவிலான எதிர்பார்ப்பைக் கிளப்பியிருந்தது. அந்த வகையில் தாக்கல் செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய அம்சங்களாவன,

இதில் விவசாயம், கல்வியை வலிமைப்படுத்த முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

அரசின் நடவடிக்கைகளால் நேரடி அந்நிய முதலீடு அதிகளவில் உயர்ந்துள்ளது.ஜி.எஸ்.ரி. உள்ளிட்ட மறைமுக வரிச் சீர்திருத்தங்களால் வரி செலுத்தும் முறை எளிதாக்கப்பட்டுள்ளது. தற்போது உலகில் வேகமாக வளர்ந்து வரும் நாடாக இந்தியாவை மாற்றி உள்ளோம். நாங்கள் பதவி ஏற்கும் போது நாடு வறுமையில்மூழ்கிக் கிடந்தது.

நேர்மையான, வெளிப்படையான அரசு என வாக்குறுதி அளித்தோம். கொள்கை முடக்கத்தால் கடந்த ஆண்டு சிக்கித் தவித்தோம். கூடுதல் மூலதனத்தால் வங்கிகளில் கடன் வழங்கும் திறன் அதிகரிப்பு.நிர்வாக சீர்திருத்தத்தால் அந்நிய முதலீடு அதிகரித்துள்ளது.

வறுமையை ஒழிப்போம் என நாம் வாக்குறுதியும் அளித்துள்ளோம்.வங்கிகளுக்கு அதிக மூலதனம் அளித்துள்ளது அரசு.இரண்டரை லட்சம் கோடி பொருளாதார மதிப்புடன் உள்ள இந்தியா உலகின் 5 ஆவது பெரிய பொருளாதார நாடாகத் திகழும். உலகப் பொருளாதாரத்தில் 7ஆவது இடத்தில் இருந்து 5 ஆவது இடத்துக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(ப)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை- பங்களாதேஷ் முதல் டெஸ்ட்: இலங்கை 187/1 எனச் சிறப்பான ஆரம்பம்



சிட்டகாங்கில் நடைபெற்று வரும் இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்டில் பங்களாதேஷ் 513 ஓட்டங்கள் குவித்துள்ளது.

பங்களாதேஷ் – இலங்கை இடையிலான முதல் டெஸ்ட் சிட்டாங்கில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. பங்களாதேஷ் முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

தொடக்க வீரர் தமிம் இக்பால் 53 ஓட்டங்களும், இம்ருல் கெய்ஸ் 40 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த மொமினுல் ஹக்யூ, முஷ்பிகுர் ரஹிம் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

இதனால் பங்களாதேஷின் ஓட்ட விகிதம் ஓவருக்கு நான்கிற்கு மேல் சென்று கொண்டிருந்தது. மொமினுல் ஹக் சதம் அடிக்க, முஷ்டாபிகுர் ரஹிம் 92 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். இருவரும் இணைந்து 3ஆவது விக்கெட்டுக்கு 236 ஓட்டங்கள் சேர்த்தனர்.

இருவரின் சிறப்பான ஆட்டத்தால் பங்களாதேஷ் முதல்நாள் ஆட்ட முடிவில் 90 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 374 ஓட்டங்கள் குவித்தது. மொமினுல் ஹக்யூ 175 ஓட்டங்களுடனும், மெஹ் முதுல்லா 9 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 2ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. மொமினுல் ஹக்யூ மேலும் 1 ஓட்டத்தை எடுத்து 176 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதன்பின் வந்த மொசாடெக் ஹொசைன் 8 ஓட்டங்களிலும், மெஹிதி ஹசன் மிராஸ் 20 ஓட்டங்களிலும், சன்சாமுல் இஸ்லாம் 24 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

என்றாலும் மெஹ்முதுல்லா ஆட்டமிழக்காமல் 83 ஓட்டங்கள் எடுக்க பங்களாதேஷ் 129.5 ஓவர்களில் 513 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தது. இலங்கை அணி சார்பில் லக்மல், ஹெராத் தலா 3 விக்கெட்களும், சண்டகன் 2 விக்கெட்களும் வீழ்த்தினார்கள்.

பின்னர் இலங்கை அணி முதல் இன்னிங்ஸை ஆரம்பித்தது. இரண்டாவது நாள் ஆட்டநேர முடிவில் இலங்கை 1 விக்கெட்டை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. திமுத் கருணாரத்ன ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். குசல் பெரேரா 83 ஓட்டங்களுடனும் தனஞ்ய 104 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.



## 'விக்ரம் — ராஜன் — சங்கு' வெற்றிக் கிண்ணம்

# கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை



கே.ஸி.ஸி.ஸி. அணி



யாழ். பல்கலை அணி



ஓல்ட் கோல்ட்ஸ் அணி



ஜொலி ஸ்ரார் அணி

கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் 'விக்ரம் – ராஜன் – சங்கு' வெற்றிக் கிண்ணத்துக்காக வருடம் தோறும் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை காலை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இந்தச் சுற்றுப் போட்டியில் வருடம் தோறும் கொக்குவில் மத்திய சனசமூக அணி, ஜொலி ஸ்ரார் அணி, யாழ். பல்கலை அணி, ஆகியவையும் நான்காவது அழைக்கப்பட்ட அணி ஒன்றும் பங்குபற்றுவது வழமை.

இம்முறை வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் அணி அழைக்கப்பட்ட அணியாக இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்றுகின்றது.

முதல் சுற்று, லீக் முறையில் 30 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட ஆட்டங்களாக அமையும்.

பங்குபற்றும் நான்கு அணிகளும் லீக் முறையில் தலா மூன்று கட்டங்களாக மோதும். அதில் தேர்வாகும் முதலிரண்டு அணிகளும் இறுதிப் போட்டியில் பங்குபற்றும்.

இறுதியாட்டம் 40 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்டதாக அமையும்.

நாளை ஆட்டத்தில் காலை 8.30 மணிக்கு ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலை அணி மோதும்.

பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து ஓல்ட் கோல்ட்ஸ் அணி விளையாடும்.

கடந்த வருடச் சுற்றுப் போட்டியில் கே.ஸி.ஸி.ஸி. அணி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

## 500 விக்கெட்கள் வீழ்த்தி ஹெரத் சாதனை



இலங்கை பந்துவீச்சாளர் ரங்கன ஹேரத் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 500 விக்கெட்களை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

இலங்கை – பங்களாதேஷ் அணிகள் இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நடந்து வருகிறது. முதல் இன்னிங்ஸில் பங்களாதேஷ் அணி 513 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இலங்கை பந்துவீச்சாளர் ரங்கன ஹெரத் இதில் 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

இதன் மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் 500 விக்கெட்கள் வீழ்த்திய மூன்றாவது இலங்கை வீரர் என்ற பெருமையை ஹெரத் பெற்றுள்ளார். அவர் மொத்தமாக டெஸ்டில் 408 விக்கெட்டுகளும், ஒருநாள் போட்டிகளில் 74 விக்கெட்களும், ரி - 20 போட்டிகளில் 18 விக்கெட்களும் எடுத்துள்ளார்.

இந்தப் பட்டியலில் முத்தையா முரளிதரன் முதலிடத்திலும், சமிந்தா வாஸ் இரண்டாமிடத்திலும் உள்ளனர்.

# புதிய சாதனை படைத்த பங்களாதேஷ் வீரர்

இலங்கை – பங்களாதேஷ் அணிகள் இடையில் நடைபெற்று வரும் முதல் டெஸ்ட் போட்டியில் பங்களாதஷ் வீரர் மொமினுல் ஹக் புதிய சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.



இரண்டு போட்டிகள் கொண்ட தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் பங்களாதேஷ் சிட்டாகாங் நகரில் ஆரம்பமாகியது. முதல் நாள் ஆட்ட நேர முடிவில் பங்களாதேஷ் அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 374 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் வீரர் மொமினுல் ஹக் அபாரமாக விளையாடி 175 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

160 ஓட்டங்கள் எடுத்த போது சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் 2ஆயிரம் ஓட்டங்களைக் ஹக் தொட்டார். இதன் மூலம் குறைந்த இன்னிங்ஸில் 2ஆயிரம் ஓட்டங்கள் எடுத்த பங்களாதேஷ் வீரர் என்ற சாதனையை ஹக் படைத்துள்ளார்.

வெறும் 47 இன்னிங்ஸில் 2ஆயிரம் ஓட்டங்கள் அவர் எடுத்துள்ளார். இதற்கு முன்னர் அந்த அணியைச் சேர்ந்த தமீம் இக்பால் 53 இன்னிங்ஸில் 2ஆயிரம் ஓட்டங்கள் எடுத்ததே சாதனையாக இருந்த நிலையில் அதை ஹக் முறியடித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது நான்கு கட்சிகள் இணைந்து நடத்தும் ஆட்சியில் கூட்டமைப்பினரும் பங்காளர்களாகவே உள்ளனர். அவர்கள் ஒருபோதும் எதிர்க்கட்சியாகச் செயற்படவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் முதல்முறையாக நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்தார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

தாமரைமொட்டுச்சின்னத்தில் போட்டியிடும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் அவர் கலந்து கொண்டு விசேட உரை ஆற்றினார்.

அவர்அங்கு மேலும்தெரிவித்தவை வருமாறு:-

கடந்த மூன்று வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணம் வந்திருப்பதாலும், இங்குள்ள மக்களுடன் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தாலும் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். ஆனால் அன்றைய நிலைமைக்கும் இன்றைய நிலைமைக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. எங்களது ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கு முழுச் சுதந்திரம் காணப்பட்டது.

ஆனால் அன்று நாங்கள் இருந்தபோது இருந்த நிலை இன்று இருக்கின்றதா என நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். புதிய ஆட்சி உருவாகிக் குறிப்பிட்ட சில கால இடைவெளிக்குள் என்ன அபிவிருத்தி இடம்பெற்றது என்பதையும், தமிழ் மக்களுக்கு என்ன செய்திருக்கின்றார்கள் என்பதையும் தமிழ் மக்களே சிந்தித்து பார்க்கவேண்டும்.

நாம் ஆட்சியில் இருந்தபோது மின்சாரம், நீர், போக்குவரத்துக்கான வீதிகள், புதிய பாடசாலைகள், பாடசாலைகளில் ஆய்வுகூட வசதிகள், வைத்திய சாலைகள், மிக நீண்ட காலமாக இல்லாதிருந்த வடக்குக்கான ரயில் சேவை என அனைத்துத் துறைகளிலும் அபிவிருத்தியைச் செய்திருந்தோம்.

இவ்வாறு நான் அபிவிருத்திகளைச் செய்ததற்கு காரணம் தெற்கு மக்கள் போன்று வடக்கு மக்களும் வாழவேண்டும் என்பதற்காகவே.

ஆனால் இன்று எமது மண்ணில் விளைந்த விவசாயப் பொருள்களான அரிசி, உழுந்து போன்றவற்றை உற்பத்தி செய்ய முடியாது வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உள்ளது. அதனால் அரிசியைத்தாய்லாந்திலும், உழுந்தை இந்தியாவிலும், விவசாயப் பசளைகளை பாகிஸ்தானிலும் இருந்து பெற்றுக் கொள்வதற்குக் காத்திருக்கவேண்டியதாக இருக்கிறது. இந்த அரசு எந்தவொரு அபிவிருத்தியையும் செய்யவில்லை என்பது மட்டுமல்லாமல் செய்ய முடியாத நிலையிலும் இருக்கின்றது.

தற்போது நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய நான்கு கட்சிகள் இணைந்தே ஆட்சி செய்கின்றன. ஆயினும் நாங்கள் 54 பேர் இருக்கின்ற போதும் 16 பேரைக் கொண்ட கூட்டமைப்பினரே எதிர்க்கட்சியாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எதிர்க் கட்சியாகச் செயற்படவில்லை.

ஏனெனில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவின் 'பொக்கற்' . ரணிலின்கைப்பைக்குள்சம்பந்தன் இருப்பதால் கூட்டமைப்பு ஆளும் கட்சியாகச் செயற்படுகின்றது. எங்களுடன் இருக்கின்ற அருண் தம்பிமுத்துவின் மாமனார் தான் சம்பந்தன்.

மற்றையவர்களைக் குறை சொல்லி ஏமாற்றும் செயற்பாடுகளைத் தான் கூட்டமைப்பினர் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர். நான் ஆட்சியில் இருந்தபோது அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பாகப் பேசுவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்திருந்தேன். அதற்கு வருவதாகக் கூறிவிட்டு அவர்கள் சென்றிருந்தனர். ஆனால் ஏனோ தெரியாது அவர்கள் திரும்பி வரவேயில்லை.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா 2 கோடி ரூபாவை இந்த அரசு வழங்கியதாக அந்தக் கட்சியின் சக உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூறுகின்றார். இவ்வாறு வாங்கிய பணத்தை அவர்கள் மக்களுக்கான எந்தத் திட்டத்தையும் செய்வதற்காகப் பயன்படுத்தாது தங்கள் திட்டத்துக்காகவே பயன்படுத்தியிருக்கிறார்கள்.

எனவே இனிமேலும் வடக்கு மக்கள் இவர்களிடம் ஏமாற்றமடையவேண்டாம். இந்த அரசு பொய்களைக் கூறிக் கொண்டிருந்ததைத்தவிர வேறெதனைச் செய்திருக்கிறது? எனவே இவர்களுக்காக உங்களது வாக்குகளைப் பயன்படுத்த வேண்டாம். நாங்கள் தற்போது புதிய வித்தியாசமான கட்சியில் வித்தியாசமான சிந்தனையில் வந்துள்ளோம். எமது தாமரை மொட்டுச் சின்னத்தை மக்கள் வெற்றி பெறச் செய்து நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும்.

நாங்கள் இனவாதிகள் அல்ல. எங்கள் உறவினர்களும் இங்கு தமிழர்களைத் திருமணம் செய்து இருக்கின்றனர். ஆகவே உங்களுக்குத் தேவையான அனைத்துத் தேவைகளையும் நாம் எமது காலத்தில் வழங்கியிருந்தோம். இருந்தபோதிலும் நாங்கள் தேவையற்ற காரணத்தினால் தோல்வியைத் தழுவ வேண்டியிருந்தது. ஆகவே இனியும் மக்கள் ஏமாறாது சிந்தித்துச் செயற்படவேண்டும் - என்றார். (ஐ-7)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விப் பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தின் ஊடகப் பேச்சாளர் அலுவலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தல்கள் சட்டதிட்டங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்த கையேடு ஒன்றையும், பொலிஸ் தலைமையகம் தயார் செய்துள்ளது. அந்தக் கையேட்டின் பிரதிகள் அடுத்து வரும் நாள்களில் அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பிவைக்கப்படும் - என்றார். (ஐ)

## மஹிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த இதில் பங்கேற்றார்.

முன்னாள் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரத்துக்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த நேற்று முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் வருவார் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் நேற்று நண்பகல் 12 மணியளவிலேயே யாழ். வீரசிங்கம் மண்டபத்தை வந்தடைந்தார்.

அவரின் வருகையை முன்னிட்டு யாழ்.நகர் பகுதிகளில் ஆயுதம் தாங்கிய விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

அதேவேளை, கூட்டம் நடைபெற்ற மண்டபத்தின் பிரதான பாதுகாப்புப் பணியில் முன்னாள் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவே பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டது.

அத்துடன் மேடையில் முன்னாள் ஜனாதிபதி உரை நிகழ்த்தும் இடத்தில் குண்டு துளைக்காதகண்ணாடிபொருத்தப்பட்டு இருந்தது. முன்னாள் ஜனாதிபதி உரை நிகழ்த்தும்போது குண்டு துளைக்காத பாதுகாப்பு அங்கி அணிந்த பாதுகாப்புப் பிரிவினர் பாதுகாப்பு வழங்கினார்கள்.

மஹிந்த ராஜபக்ஷவுக்குக் குண்டு துளைக்காத உடையணிந்த பாதுகாவலர்களுடன், பெரும் எண்ணிக்கையான பொலிஸாரும் குவிக்கப்பட்டுப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இந்தப் பிரசாரக் கூட்டத்துக்கு வந்த வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் உட்பட அனைவரும் கடும் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். மண்டபத்துக்கு உள்ளேயும் வெளியிலும் பெரும் எண்ணிக்கையான பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாக இருந்ததால் மஹிந்தவைச் சந்திப்பதற்கும், அவருடன் போட்டோ எடுப்பதற்கும் ஆதரவாளர்கள் முண்டியடித்தபோதும் அது பயனளிக்கவில்லை. (ஐ-7)

## அம்பாந்தோட்டையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஓர் அரச நிகழ்வில் கலந்து கொண்டபோதே நிர்மலா சீதாராமன் இந்தச் சந்தேகத்தைக் கேள்வியாக எழுப்பினார்.

சீனாவுக்குக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாததால், அம்பாந்தோட்டைத்துறைமுகத்தைச் சீனாவுக்கு 99 வருட குத்தகைக்கு இலங்கை கொடுத்திருக்கிறது.

ஆனால், தனது நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் முயற்சியில் ஒரு கட்டமாக இலங்கையைச் சீனா பயன்படுத்திக்கொள்ளுமா என்று பலருக்கும் சந்தேகம் உண்டு.

இந்தத் துறைமுகத்தைச் சீனா துறைமுக நடவடிக்கைகளுக்காக மட்டும் பயன்படுத்திக்கொள்ளும் என்பதை இலங்கையோ, சீனாவோ உறுதி செய்யுமா? என்பதுஎனதுகேள்வி. எனது கேள்வியே மேலே கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் என்று அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். (ஐ)

## மாவிட்டபுரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்படுவது தொடர்பிலேயே யாழ்ப்பாணத்தில் பெரிய பிரச்சினையாக உள்ளது. தமிழரசுக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் இம்மானுவேல் ஆர்னோல்ட் குருநகரில் ஊர்வலம் நடத்தினார் என்று குற்றச்சாட்டு எழுந்தது.

அது தொடர்பில் அங்கு சென்று விசாரணைகள் நடத்தப்பட்ட போது, எவருமே அதனைக் காணவில்லை என்று தெரிவித்தனர். ஆதாரங்கள் இல்லாத போது, நடவடிக்கை எடுக்க முடியாது.

ஆனால் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற தேர்தல் விதிமீறல் தொடர்பில் முழு ஆதாரங்களும் உள்ள போது, அதனை மூடி மறைப்பது தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கே அவமானம்.

தேர்தல் விதிகளை மீறியோருக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பதில் ஆணைக்குழு உறுதியாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சில பத்திரிகைகளையும் பத்திரிகை ஆசிரியர் ஒருவரையும் வைத்துக்கொண்டுசொல்லவேண்டிய பொய்கள் எல்லாவற்றையும் சொல்கிறார்கள். சட்டத்தரணி குருபரன் தொடர்பில் ஒரு கட்டுரை வெளியாகியுள்ளது. அதில் அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டபீடத் தலைவர் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சட்டபீடம் இல்லை. அது ஒரு துறையாகத் தான் உள்ளது. பீடத் தலைவர் என அவரை அலங்கரிக்கிறார்கள். அவர் கட்சிக்காக வேலை செய்கின்றார்.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுப்பினராக என்னை முன்மொழிந்தது அரசியல் கட்சி இல்லை. அரசமைப்புச் சபையில் அங்கம் வகிக்கும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனமே என்னை முன்மொழிந்தது. அதன் பின்னர் அரசமைப்புச் சபையில் உள்ள கட்சிகள் என்னை ஆதரித்திருக்க முடியும். அரசமைப்புச்சபையின் 10 உறுப்பினர்களில் பெரும்பான்மையானோரின் ஆதரவில் தான் நான் தெரிவாகினேன்.

யாழ்ப்பாணத்தில் வெளியாகும் பத்திரிகைகள் எதையுமே நம்பமுடியவில்லை. எதையுமே எழுதலாம் என்ற போக்குக் காணப்படுகிறது. அவர்களைக் கேள்வி கேட்க யாருமே இல்லை. ஆங்கிலப் பத்திரிகைகளைப் பார்த்து உண்மையை அறிவதற்கும் யாருமில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து பொய்களை வாசித்து பொய்களுக்குள்ளேயே மூழ்கிவிட்டோம். இவ்வாறு கண்டபடி எழுதுவதனால்தான் ஒரு பத்திரிகையின் ஆசிரியர் இலங்கை அதிபர் சேவைப் பரீட்சையில் சித்தி பெறவில்லை. இலங்கை அதிபர் சேவைப் பரீட்சையில் சித்தியடைய முடியாதவர், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் வருகை விரிவுரையாளராக உள்ளார். அவர் எதனைக் கற்றுக்கொடுக்கிறார். இவ்வாறானவர்களால்தான் யாழ். பல்கலைக்கழகம் பிழையான நிலையில் உள்ளது. - என்றார். (ஐ-7)

## கச்சதீவுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் என எதிர்பார்க்கப்படுகிறது. அங்கு பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு யாழ். யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கச்சதீவு திருவிழாவுக்கான முன்னாயத்தக் கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. அது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கச்சதீவில் இம்முறை இலங்கையில் இருந்து 6 ஆயிரத்து 500 பக்தர்களும், இந்தியாவில் இருந்து 2 ஆயிரத்து 500 பக்தர்களும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருவிழாவுக்கான ஒழுங்குகளுக்குரிய பிரதான பொறுப்பை கடற்படையினர் ஏற்றுள்ளனர். அதேபோன்று ஏனைய துறையினர் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதன்படி தத்தமது சேவைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பக்தர்களின் நலன் கருதி நிரந்தர மலசல கூட வசதிகள் மற்றும் மேலதிகமாக தற்காலிக மலசல கூட வசதிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகட்டுவன் வரையான பஸ் சேவைகள் அதிகாலை 4 மணியில் இருந்து பிற்பகல் 1 மணிவரை நடைபெறும். அதே போன்று குறிகட்டுவனில் இருந்து கச்சதீவு வரை அதிகாலை 5 மணிக்கு ஆரம்பித்து பிற்பகல் 2 மணி வரை நடைபெறும். படகுச் சேவைக்கான ஒரு வழி கட்டணமாக 300 ரூபா அறவிடப்படவுள்ளது.

நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்கு ஒரு வழிக் கட்டணமாக 225 ரூபா அறவிடப்படவுள்ளது.

அத்துடன் சேவையில் ஈடுபடும் படகுகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே சேவைக்கு அனுமதிக்கப்படவுள்ளன. பயணிகள் பாதுகாப்பு அங்கி அணியவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இம்முறை பொலிஸ் பாதுகாப்பு வசதிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. 200 பொலிஸார் சேவையில் ஈடுபடவுள்ளனர். பயணிகள் படகுச் சேவை இடம்பெறும்போது கடற்படை ரோந்து நடவடிக்கைகள் நடைபெறும்.

ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களை எடுத்துச் செல்ல வேண்டாமென்று அறிவித்துள்ளார். திருப்பலி நிறைவடைந்த பின்னர், அந்தப் பகுதியில் சூழல் மாசடைவதனால் பக்தர்கள் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருள்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். - என்றார். (ஐ-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தியையும் வேலை வாய்ப்பையும் பெறுவதற்கு இந்த தேர்தலைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்!




**அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு**

கொழும்பு, பெப். 02

அபிவிருத்தியையும் இளைஞர்களின் வேலை வாய்ப்பையும் பெறுவதற்கு இந்த தேர்தலை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா குருமன்காட்டு பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த தேர்தலிலே பிழையான பாதையிலே வாக்களித்து நாங்கள் உருவாக்கிய பிரதேச சபைகள், நகரசபைகளை என்ன செய்தார்கள் என்ன அபிவிருத்தி நடந்தது என்று எங்களுக்குத் தெரியும்.

கடந்த காலத்தில் ஆட்சி புரிந்தவர்கள் மத்திய அரசினூடாக நாங்கள் கொடுத்த நிதியை செலவு செய்தார்கள் ஒழிய அவர்களிடம் அபிவிருத்தி தொடர்பான எந்தத் திட்டங்களும் இருக்கவில்லை.

அதன் தாக்கத்தை இன்று உணர்கின்றோம். எமது மக்களின் பல பிரச்சனைகளுக்கு தீர்வு இல்லாமல் இருக்கின்றார்கள். சில கிராமங்களில் பாதைகள் அமைக்கப்படவில்லை.

எனவே, மக்களே சந்தர்ப்பத்தை தவற விட்டு விடாதீர்கள். பல கட்சிகளிலிருந்து வருவார்கள் பல பாசாங்குகளை செய்துவாக்குறுதிகளை வழங்கி வாக்குகளை கேட்பார்கள்.

அவர்களால் உங்களுக்கும், உங்கள் ஊருக்கும் எந்த அபிவிருத்திகளையும் செய்ய முடியாது என்பதனை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நல்லாட்சியை பிரதமர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினூடாகக் கொண்டு வந்த நாம் எமது மக்களின் கல்வியையும், பிரதேசத்தின் அபிவிருத்தியையும் இளைஞர்களின் வேலை வாய்ப்பையும் பெறுவதற்கு இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

முப்பது வருடங்களாக யுத்தத்தின் பின் சமாதானம். சமாதானத்தின் பின் அதைத் தருவோம் இதைத்தருவோம் எனச் சொல்பவர்கள் எங்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

எனவே, நாங்கள் உருவாக்கிய பிரதமர் இருக்கிறார். நாங்கள் உருவாக்கிய அரசு மற்றும் அமைச்சர்கள் இருக்கிறார்கள்.

அதனால் இந்தச்சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி நமது எதிர்காலத்தை, நமது தலைவிதியை, நமது பிள்ளைகளின் கல்வி மற்றும் எதிர்காலத்தை எமது பிரதேசத்தின் அபிவிருத்தியை நாங்கள் நிம்மதியாக வாழ்வதற்கு இந்தத் தேர்தலிலே யானைச் சின்னத்திற்கு வாக்களித்து யானையின் மூலம் ஒற்றுமையை காட்டுவோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(க)

## எல்பிட்டியில் வாள்களுடன் நபர் ஒருவர் கைது!

கொழும்பு, பெப். 02

எல்பிட்டிய பகுதியில் நான்கு வாள்களுடன் ஒருவர் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் பிரிவிற்குக் கிடைத்த தகவலின் படி எல்பிட்டிய, நிகஹதென்ன பகுதியில் வீடொன்றை பரிசோதிக்கும் போதே சந்தேக நபர் வாள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைக் குற்றத்திற்காக சிறைச்சாலையில் இருந்த நபர் ஒருவருடைய வீட்டில் இருந்தே இந்த வாள்கள் மீட்கப்பட்டன எனப் பொலிஸ் விசேட அதிரடிப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக எல்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

(க)

## எமது நண்பர்கள் பதியூதீனின் கட்சியில் வெட்கமில்லாமல் நிற்கின்றார்கள்!



**சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவிப்பு**

மன்னார், பெப். 02

பயங்கரவாதிகளின் தலைவரே பிரபாகரன் எனப் பேசும் ரிஷாட் பதியூதீனின் கட்சியில் எமது நண்பர்கள் வெட்கமில்லாமல் வேட்பாளர்களாக நிற்கின்றார்கள்.

அந்தக் கட்சியில் நின்று கொண்டு எமது தலைவர் பிரபாகரன் என்று கூறுகின்றார்கள். இதை எங்கு போய் சொல்ல என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மல நாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதை குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

எனக்கு ஆனந்த சங்கரி ஐயாவின் வரலாறும் தெரியும், சுரேஷ் பிறேமச் சந்திரனின் வரலாறும் தெரியும், சிவசக்தி ஆனந்தனின் வரலாறும் தெரியும். எமது தளபதி கேணல் ஜெயத்தின் அப்பாவை கொலை செய்தது யார் என்றும் எனக்குத் தெரியும்.

இவ்வாறான வரலாற்றை கொண்டவர்கள் தான் தற்போது எம்மீது குற்றம் சுமத்துகின்றார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# காப்பியத் தலைவன் அமரர்...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**இறுதிநாள்கள்**


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் மகேஸ்வரன் பணியாற்றிய காலத்தின் மிகப்பெரும் பகுதி எவ்வாறு இருந்தது என அவரின் நீண்டகால நண்பரான பேராசிரியர் குமார் ஆழ்ந்த உணர்ச்சியுடன் விவரிக்கிறார்.

குண்டுவீச்சுக்கள், எறிகணைகள், கெரில்லா யுத்தமொன்றில் காணப்படும் நிச்சயமற்ற வாழ்க்கைச் சூழல் என்பன வற்றின் வலிகளுடன் இருந்த யாழ்ப்பாணத்தில் அவர் வாழ்ந்தார்.

சுகவீனமான நேரங்களில் வைத்தியசாலைக்குச்செல்லக்கூடியதாகஇருக்குமா என்ற பயம், வைத்தியசாலைக்குச் சென்றாலும் பார்வையிட பொருத்தமான வைத்தியர் இருப்பாரா என்ற சந்தேகம். அப்படி வைத்தியர் இருந்தாலும் அவர் எழுதித் தரும் மருந்துகள் பெறக்கூடியதாக இருக்குமா என்னும் ஏக்கம் – இதுதான் அன்றைய விதி.

இந்த நிலைமை பேராசிரியர் மகேஸ்வரனின் உடல் நலம் மோசமாகுவதற்கு காரணமாய் இருந்திருக்கும் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.

1997 இல் அவர் சிகிச்சைக்காக இந்தியா சென்றார். தனது இதயம் அதன் ஆற்றல் திறனின் 40% அளவில்தான் தொழிற்படுவதாகவும் அதனால் இதய பக்கவழி சத்திரசிகிச்சையை செய்ய முடியாதென வைத்தியர்கள் தெரிவித்தனர் என எனக்குக் கூறினார். எனது அனுபவமின்மை காரணமாக இருக்கலாம் இந்த நோய் இவ்வளவு



சீக்கிரம் அவரது உயிரைப் பறிக்கும் என்று நான் நம்பவில்லை. அவரை அறிந்தோர்க்கெல்லாம் ஆழ்ந்த துயரைத் தருமாறு எனது நம் பிக்கை பொய்த்தது.

தனது பாறைபோன்ற மனவுறுதியாலும் மனவுரத்தினாலும் மேலும் சில மாதங்களுக்கு தன்னைக் கொண்டு சென்றார். 1998 பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி 56 வயதில் அவரது வாழ்வு முடிவடைந்தது. அவரது இறுதி ஊர்வலம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றவற்றுள் மிகப் பெரிய ஒன்றாக இருந்தது.

நூற்றுக் கணக்கான அவரது மாணவர்கள், பழைய மாணவர்கள், பல்கலைக் கழக அலுவலர்கள் மேலும் அவரைப் போற்றுபவர்கள் கண்ணீருடன் நடைபவனியில் வர அவரது உடலைத் தாங்கிய பேழையை அவரது மாணவர்கள் பல மைல்களுக்கு தமது தோளில் சுமந்து சென்றார்கள். அவரது வாழ்க்கைச் சான்றாக அந்த இறுதி ஊர்வலம் அமைந்தது.

★




## மீசாலை வீரசிங்கம் கல்லூரியின் மரதன் ஓட்டப் போட்டி!

யாழ்ப்பாணம், பெப்.02

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் மரதன் ஓட்டப் போட்டி நேற்று இடம்பெற்றது.

இந்த மரதன் ஓட்டப் போட்டி நேற்றுக் காலை 5.45 மணியளவில் மிருசுவில் பகுதியில் ஆரம்பித்து பாடசாலையின் முன்றலில்நிறைவடைந்தது.

வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு இல்லங்களுக்கிடையில் இந்த மரதன் ஓட்டப் போட்டி இடம்பெற்றது. (க21)

## பைசர் முஸ்தபா, லக்ஷ்மன்கிரியெல்ல ஆகியோருக்கு எதிராக முறைப்பாடு!

கொழும்பு, பெப். 02

உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகியோருக்கு எதிராக முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறி, வாக்காளர்களை அச்சுறுத்தும் வகையில், கருத்துக்களை வெளியிட்டனர் எனத் தெரிவித்து, சட்டத்தரணிகள் சங்கம் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி, இளவாலை கன்னியர்மட மகா வித்தியாலயம் ஆகியவை இணைந்து நடத்திய இல்ல மெய்வன்மைப் போட்டி சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் அந்தோனிப்பிள்ளை பத்திநாதன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் பழைய மாணவர் சங்கத் தலைவர் ஹென்றீஸியன் ஜே.ஜே.சுரேந்திராஜ் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

# மரண அறிவித்தல்



## அமரர் செபஸ்தியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை

(மில் உரிமையாளர்)

யாழ்ப்பாணம் நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் செபஸ்தியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை அவர்கள் கடந்த (31.01.2018) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.02.2018) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பூதவுடல் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 23, கோவில் ஒழுங்கை,
நாவாந்துறை.
தொ.பே: 077 235 9007

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி சிந்துஜா அகிலநேசன்



**தோற்றம்:- 11.06.1986** **மறைவு:- 28.01.2018**

யாழ். வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிந்துஜா அகிலநேசன் அவர்கள் கடந்த (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி – வாலாம்பிகை தம்பதிகளின் அன்புப் பேர்த்தியும், கனகலிங்கம் – சவுந்தரம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், தர்மராசா – திலகலக்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும், அகிலநேசனின் அன்பு மனைவியும், அஜிஷ், ஆராதனா ஆகியோரின் அன்புத்தாயாரும், ஜீவஜோதி (பிரான்ஸ்), தமிழ்ச்செல்வன் (பிரான்ஸ்), குகநாதன்(பிரான்ஸ்), சித்திரா (பிரான்ஸ்), ஸ்ரீரஞ்சன்(சுவீடன்), கௌசலா(பிரான்ஸ்), ஸ்ரீகஜன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுகுமார் (பிரான்ஸ்), ராஜசேகரன்(பிரான்ஸ்), றாஜ்குமார்(பிரான்ஸ்), சர்மிலா(பிரான்ஸ்), விஜயராணி(பிரான்ஸ்), லீசா(சுவீடன்), சிலக்சிகா(இலங்கை) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் பிரசன், பிரவின், பிரியங்கா, கீர்த்திகா, ஹரிஸ், றக்சனா, யனிஸ், யாதவ் ஆகியோரின் பாசமிகு சிறிய தாயும், சஞ்சய், சாரிகா, சாரா, ஆகாஸ், அர்ச்சயா, அஸ்மிதா, நேகா, சியாம் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கள் இன்று (02.02.2018) வெள்ளிக்கிழமை யாழ். வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**114/6, முருகமூர்த்தி வீதி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.02.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.